07th January 2024

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 13 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

பொஸ்பரஸ் குண்டு தாக்கியதில்
## கரைந்து போன சாராவின் தசைகள்



இந்தப் பெண்ணின் பெயர் சாரா, அவளுக்கு 17 வயது, அவளும் அவளது 8 வயது சகோதரனும்

02ம் பக்கம்பார்க்க...



# மக்கள் பிரச்சினை தீர்க்காது செங்கடலுக்கு ஏன் கப்பல்
## இத்துப் போன கயிரை யார் தந்தது
### ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பும் சஜித்



ஹூதி கிளர்ச்சியாளர்களைக் கட்டுப்படுத்த எமது நாட்டு கடற்படைக் கப்பலை செங்கடலுக்கு அனுப்புவது தொடர்பாக ஜனாதிபதி கூறிய கருத்துக்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பதில் வழங்கியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

செங்கடலில் ஹூதி கிளர்ச்சியாளர்களின்

02ம் பக்கம்பார்க்க...

## புத்தசாசன அமைச்சர் தலைமையில் ஹஜ் குழு சவூதி பயணம்
### ஒப்பந்தத்திலும் கைச்சாத்து

இவ்வாண்டுக்கான ஹஜ் உடன்படிக்கைக்கு கைச்சாத்திடுவதற்காக புத்தசாசன சமய கலாச்சார விவகார

02ம் பக்கம்பார்க்க...

## புத்தாண்டின் முதல் பாராளுமன்ற அமர்வு 9ல்

புது வருடத்துக்காக பாராளுமன்றம் முதன் முறையாக எதிர்வரும் 9ஆம் திகதி கூடவுள்ளது.

அந்த வாரத்தில் தொடர்ந்து நான்கு நாட்கள் பாராளுமன்றம் கூடிய பின்பு அநேகமாக பாராளுமன்ற

02ம் பக்கம்பார்க்க...

# செங்கடலுக்கு கப்பல் அனுப்ப ஆய்வுகளை மேற்கொள்கிறோம்
### கடற்படை பேச்சாளர்

செங்கடலில் ஹவுத்தி போராளிகளைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையிலிருந்து கடற்படை அணி ஒன்றை அனுப்பி வைப்பதற்கு எடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக இலங்கை கடற்படை உயர் மட்டத்தினர் ஆராய்ந்து வருகின்றனர்.

கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கெப்டன் தயா விக்ரமசூரிய இது தொடர்பாக கடற்படையினர் ஆய்வு நடத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

02ம் பக்கம்பார்க்க...

# செங்கடல் கூட்டணி நாடுகள் தாக்கப்படும்
### ஹவுத்திகள் எச்சரிக்கை

யேமனின் ஹூதி உச்ச புரட்சிக் குழுவின் தலைவரான முகமது அலி அல்-ஹூதி, அமெரிக்கா தலைமையிலான செங்கடல் கூட்டணியில் ஈடுபடும் எந்தவொரு நாடும் அதன் கடல் பாதுகாப்பை இழந்து இலக்கு

03ம் பக்கம்பார்க்க...

## கல்விப் பிரச்சினைகள் தீர்க்க முஸ்லிம் கல்வி மாநாடு முடிவு

(அஷ்ரப் ஏ சமத்)

கொழும்பு சாஹிராக் கல்லூரியில் நேற்று (06) அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாடு

02ம் பக்கம்பார்க்க...

## தமிழரசு கட்சி தலைவராக சுமந்திரனா? ஸ்ரீதரனா?
### 20ல் கூடி முடிவு





தமிழர் கூட்டமைப்பின் தலைமைத்துவத் தெரிவு எதிர்வரும் 20ஆம்

02ம் பக்கம்பார்க்க...

திரிசங்கு நிலையில் டளஸ்
## ஜே.வி.பியுடன் இணைவாரா?



ஜே.வி.பி. கூட்டணி ஜாதிக பலவேகவுடன் தான் இணைவது பற்றி இதுவரை முடிவெடுக்க வில்லையென சுதந்திர மக்கள் சபையின்

02ம் பக்கம்பார்க்க...

## கட்டுநாயக்க விமான நிலையத்தில் புதிய கண்காணிப்பு கட்டமைப்பு
### அமைச்சரால் நேற்று அங்குரார்ப்பணம்

(ஐ.ஏ. காதிர் கான்)

குற்றவியல் அல்லது சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய பயணிகளை அடையாளம் காணும் நோக்கில், கட்டுநாயக்க விமான நிலையத்தின்

02ம் பக்கம்பார்க்க...

# மத நல்லிணக்கம் அபிவிருத்திக்கு முக்கியம்
### யாழில் ஜனாதிபதி தெரிவிப்பு



பொருளாதார அபிவிருத்திக்கு மத நல்லிணக்கம் மிகவும் முக்கியமானது என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

வடக்கில் யுத்தத்தினால் இழந்த வருமானத்தை வடக்கிற்கு மீள

02ம் பக்கம்பார்க்க...



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

## மத நல்லிணக்க...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வழங்குவதற்கான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை துரிதப்படுத்த எதிர்பார்ப்பதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மதத் தலைவர்கள் ஆற்றக்கூடிய பணிகள் பாரியதெனவும் சுட்டிக் காட்டினார்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று (06) யாழ். மாவட்ட சர்வ மதத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது வடமாகாண பாதுகாப்புப் பிரிவினரின் கீழ் உள்ள பகுதிகளில் உள்ள கோவில்கள் மற்றும் தேவாலயங்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் வழங்கப்படுவதுடன், அந்த மத ஸ்தலங்களை மீளமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மேலும், அனைத்து மதத் தலைவர்களும் நல்லூர் ஆலய பொறுப்பாளர்கள் விரும்பினால் நல்லூர் ஆலயத்தை விட பெரிய ஆலயத்தை அமைக்க முடியும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கிறிஸ்தவ தேவாலயங்களில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் குறிப்பாக மடு தேவாலயத்தில் நிலவும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

## மக்கள்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தாக்குதல் நடவடிக்கைகளால், எமது நாட்டிலும் பொருட்களின் விலை அதிகரிக்கும். எனவே, நாமும் கடற்படையின் ஒரு பகுதியினரை, 250 மில்லியன் ரூபா செலவிட்டு இலங்கை கடற்படைக் கப்பலை ஈடுபடுத்தி, இந்த ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக ( ளநயயவசழடடைபெ ) வேலைத்திட்டத்தில் பங்கெடுக்க வேண்டும் என, ஜனாதிபதி அண்மையில் தெரிவித்திருந்ததைக் கண்டேன்.

ஆம், ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல் நடவடிக்கைகளால் எரிபொருள் விலை ஏற்றம் ஏற்படும் என்பது உண்மை. பல்வேறு பொருட்களின் விலைகள் அதிகரிக்கும். வங்குரோத்து நாடாக இருந்துகொண்டா நாம் செங்கடலுக்குச் சென்று இந்த ஹூதி கிளர்ச்சியாளர்களுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்?

உலகில் பணம் படைத்த ஏராளானமான நாடுகள் உள்ளன. அத்தகைய நாடுகளுக்கும் இந்த ஹூதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்கள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. நாம் எல்லோரும் அறிந்த ஐவெநசயெவழைெயட ீழடடைஉந ஆயட எனும் பெயர் கொண்டு ஐக்கிய அமெரிக்கா உள்ளது. அந்நாட்டுக்கு நாம் மதிப்பளிக்கிறோம். அது ஓர் ஜனநாயக நாடு. இந்த அமெரிக்காவின் கண்ணை மூடிக்கொண்டு இந்த செயலைச் செய்ய முடியுமா?

நாம் சொல்கிறோம். 225 மில்லியனை அர்ப்பணித்து எமது கடற்படையை அனுப்புகிறோம். ஆனால், பழுதடைந்த கம்பியூட்டர்களைத் திருத்தப் பணம் வழங்குவது தவறான விடயமாக அவர்களுக்குதகவல் தொழில் நுட்ப அறிவை மேம்படுத்த கணனிகளை வழங்குவது அவர்களுக்கு தவறான விடயமாகத் தோன்றுகிறது - என்றார்.

## செங்கடலுக்கு...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேராவின் நெறியாள்கையில் செங்கடருக்கு இலங்கை கப்பல் ஒன்றை அனுப்புவது தொடர்பாக ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும் கடற்படைப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்த செயற்பாட்டுக்கு கடற்படையிலுள்ள சமுத்ரா, சாகர, விஜயபாகு, பராக்கிரமபாகு, சிதுரல, சயுரல கஜபாகு ஆகிய 8 கப்பல்கள் உள்ளதாகவும் இந்த கப்பல்களுக்கு ஹெலிக்கொப்டர்களை இறக்குவதற்காக வசதி இருப்பதாகவும் கடற்படை ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

யுத்தம் தொடர்பாக பலம் வாய்ந்த ஒரு பிரிவினராக இருக்கும் இந்தப் படையினர் அணியில் சுமார் 100 பேர் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இலங்கை கடற்படை யினர் கப்பல் அனுப்புவது தொடர்பாக கப்பலுக்கு எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வது,

உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வது, யுத்த உபகரணங்களைப் பெறும் விடயங்கள் தொடர்பாக இப்போது ஆய்வு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## கட்டுநாயக்க...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

நுழைவுப் பகுதியில் புதிய கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்பிரகாரம், விமான நிலையத்தின் நுழைவுப் பகுதியில் தன்னியக்க முக அடையாள கண்காணிப்பு அமைப்பு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக, பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழேயே, கட்டுநாயக்க விமான நிலையத்தில் தானியங்கி முக அடையாள கண்காணிப்பு (06) சனிக்கிழமை நிறுவப்பட்டுள்ளது.

## தமிழரசு...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

திகதி இடம்பெறவிருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் ஸ்ரீதரன் ஆகியோரில் ஒருவர் தலைவராக தெரிவு செய்யப்படவுள்ளனர்.

தற்போது தலைவராக இருக்கின்ற ஆர்.சம்பந்தன் வயது முதிர்வு காரணமாக அநேகமாக அரசியலில் இருந்து ஒதுங்க இருக்கின்ற நிலையிலேயே தமிழரசுக் கட்சி அதன் புதிய தலைமைத்துவத்தை தெரிவு செய்யும் பொருட்டு எதிர்வரும் 20 ஆம் திகதி கூடவுள்ளது.

வயது முதிர்வு காரணமாக ஆர். சம்பந்தன் பாராளுமன்றத்துக்கு வருவதில்லை. இந்த நிலையிலேயே தமிழரசுக் கட்சிக்கு புதிய ஒரு தலைவரைத் தெரிவு செய்வதற்கு தீர்மானித்துள்ளது. ஸ்ரீதரனுக்கு டயஸ்கோராவின் ஆதரவு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## பொஸ்பரஸ்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

காசாவின் ரிமால் சுற்றுப்புறத்தில் இஸ்ரேலிய வெள்ளை பாஸ்பரஸ் வெடிகுண்டை வெளிப்படுத்தினர், இது சர்வதேச சட்டத்தின்படி தடைசெய்யப்பட்ட மற்றும் குற்றமாகும். அவளது 8 வயது சகோதரன் இறந்துவிட்டான், பாலஸ்தீனப் பெண்ணின் உடலில் 60மூ எரிக்கப்பட்டது. அவள் முகத்தில் உள்ள தோல் தசைகள் வரை கரைந்தது. அவளை காசாவிலிருந்து வெளியே அழைத்துச் சென்று சிகிச்சை அளிக்க வேண்டும், ஆனால் இஸ்ரேல் அவளை அனுமதிக்கவில்லை.

நேற்று, அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி, "இஸ்ரேல் இனப்படுகொலை செய்கிறது என்பதற்கு எங்களிடம் எந்த ஆதாரமும் இல்லை, இஸ்ரேல் குற்றம் செய்கிறது என்பதற்கு எங்களிடம் எந்த ஆதாரமும் இல்லை", இந்த புகைப்படம் அவரது இரு கண்களிலும் இருக்க வேண்டும்.

## புத்தசாசன...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில் நான்கு பேர் கொண்ட குழுவொன்று சவுதி அரேபியா பயணமாகவுள்ளது.

சவுதி அரேபியா, ஜித்தாவில் நடைபெறும் ஹஜ் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இவர்கள் அங்கு செல்லவுள்ளனர். இதன்போது அமைச்சர் விதுல விக்கிரமநாயக்க ஹஜ் இலங்கைக்கும் ஹஜ் கொமிட்டிக்கும் இடையிலான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார். முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் பணிப்பாளர் பைசல் ஆப்தீன், அரசாங்க ஹஜ் குழுவின் தலைவர் ஐ.எம்.அன்ஸார், ஹஜ் குழு அங்கத்தவர் இஸ்பஹான் ஆகியோர் இத்தூதுக்குழுவில் இடம்பெறுவர். எதிர்வரும் 12ஆம் திகதி வரை இவர்கள் அங்கே தங்கியிருப்பார்கள். அமைச்சர் 08ஆம் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட மறுதினம் தாயகம் திரும்புவார். இலங்கைக்கு வழங்கப்பட்டிருக்கின்ற 3500 கோட்டாவில் இதுவரை 2700 பேர் இதுவரை ஹஜ் கடமையை நிறைவேற்ற விண்ணப்பித்துள்ளனர்.



## புத்தாண்டின்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

கூட்டத் தொடர் பெரும்பாலும் ஒத்திவைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறு ஒத்திவைக்கப்பட்டால் தற்போது பாராளுமன்றத்தில் இருக்கின்ற பல்வேறு குழுக்களின் பதவி காலியாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற கூட்டத் தொடரை பிறிதொரு தினத்தில் ஆரம்பிக்கலாமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டத் தொடரின் ஆரம்பத்தில் ஜனாதிபதி உரைநிகழ்த்துவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## கல்விப்...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

ஆரம்பிக்கப்பட்டு 60 வருடங்கள் ஆகின்றன. இந் நிறுவனத்தினை காலம் சென்ற கொழும்பு சாஹிராக் கல்லூரி அதிபர் சாபி மரிக்கார் அவர்கள் ஆரம்பித்து வழிநடத்தினார்கள்.

அவர்களுக்கு பின் காலம் சென்ற பேராசிரியர் ஹூசைன் இஸ்மாயில் தலைமை வகித்தார். அவர் காலமானபின் கடந்த கொவிட் 19 மற்றும் நாட்டின் நிலைமைகள் இக் கல்வி மாநாடு இயங்கமுடியாமலிருந்தது.

கடந்த மாதம் கொழும்பு சாஹிராக் கல்லூரி அதிபர் சட்டத்தரணி ரிஸ்வி மரிக்கார் அவர்களைத் தலைவராகக் கொண்டும் ,செயலாளர் ஓய்வுபெற்ற அதிபர் எம்.எம். எம். றில்வான் உப செயலாளர் கல்வியமைச்சின் முஸ்லிம் பிரிவு நஜிமுத்தீன் பிரதித் தலைவர் என். எம். அமீன், மற்றும் கலாநிதி ஜெ.டி கரீம்டீன், பேராசிரியை பரினா ருசைக், கொழும்பு ஹமீத் அல் ஹூசைனியா மற்றும் கொழும்பு பாத்திமா மகளிர் பாடசாலை அதிபர்கள் வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உட்பட கல்வித்துறை, அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை பிரநிதிகள் , அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் முன்னணியின் தலைவர் சாம் நவாஸ் உட்பட முன்னாள் ஆசிரிய ஆலோசகர் ஹமீட் ஆகியோர்கள் கொண்ட நிர்வாகக் குழுவொன்றும் தற்பொழுது இயங்கி வருகின்றது.

இம் மாநாட்டின் 60வது மாநாடு இவ் ஆண்டு நடாத்துவதற்கும் இலங்கையில் உள்ள முஸ்லிம் பாடசாலைகள், மாணவர்கள் ஆசிரியர்கள் கல்வி அதிகாரிகள், சிங்கள மொழி மூலம் மற்றும் ஆங்கில மொழி மூல மாணவர்கள் விபரங்கள் அங்குள்ள குறைபாடுகள், பௌதீக வளக்குறைபாடுகள் மற்றும் உயர் கல்வித்துறையில் பல்கலைக்கழக தரவுகள் மார்க்கக் கல்விப் பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான ஓர் அறிக்கை சமர்ப்பித்தல்,

ஒவ்வொரு 3 மாதங்களுக்கொரு முறை இக் குறைபாடுகளுடன் பாராளுமன்றத்தில் உள்ள சகல முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து அவர்களுடன் இக் குறைபாடுகள் பற்றி கலந்துரையாடுதல் , மற்றும் கல்விக் கல்லூரிகள் பிரச்சினைகள், மௌலவி ஆசிரியர் நியமனம், முஸ்லிம் மாணவிகள் வேறு மொழிகளில் பயிலும் பாடசாலைகளில் எதிர்நோக்கும் சீருடைப் பிரச்சினைகள் உயர் கல்வித்துறை மற்றும் பட்டதாரிகளை இலங்கை கல்வி நிருவாக சேவை, கல்விக் கல்லூரி போதானாசிரியர்கள், விரிவுரையாளர்களாக தமது விகிதாசாரத்திற்கேற்ப கடமையாற்ற அவர்களை ஊக்கப்படுத்தல் , வட கிழக்குக்கு வெளியே உள்ள கல்விக் கல்லூரிகளில் பிரச்சினைகள், தர்ஹா நகர் கல்விக் கல்லூரிகளில் கற்பதற்காக ஊக்கப்படுத்துதல், (தற்பொழுது அங்கு 25 வீதமான முஸ்லிம் மாணவிகள் மட்டுமே கல்வி கற்கின்றனர்) தர்ஹா நகர் மற்றும் அட்டாளைச் சேனை ஆகிய இரண்டு கல்விக் கல்லூரிகளுக்கும் முஸ்லிம் அதிபர்கள் நியமிக்கப்படாமை போன்ற பிரச்சினைகள் ஆராயப்பட்டன.

## திரிசங்கு...
**(முன் பக்கத் தொடர்ச்சி)**

தலைவர் டளஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

தான் இணையாத கட்சிகளுடன் எதிர்காலத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஜனதா சபா என்ற கட்சியின் 14 உறுப்பினர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கின்றார்கள்.

இவர்களில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா உட்பட பலர் சஜித் அணியில் இணைந்துள்ளனர்.

சஜித் அணியில் இணைய விரும்பாத டளஸ் அழகப்பெரும இப்போது தனிப்படுத்தப்பட்டுள்ளார். அவர் அநேகமாக ஜே.வி.பி.யுடன் இணையலாம் என்று கூறப்படுகின்றது.



## மின்கட்டணம் விரைவில் 50 வீதத்தால் குறைக்கப்படும்

**மின்சார சபையின் பொறியியலாளர் நந்திக பதிரகே**

(நமது நிருபர்)

மின்கட்டணத்தை கூடிய விரைவில் 50 சத வீதத்தால் குறைக்க எதிர்பார்க்கப்பட்டுள்ளதாக, மின்சார சபையின் பொறியியலாளர் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நந்திக பதிரகே தெரிவித்தார்.

இலங்கை மின்சார சபையின் தலைமைக் காரியாலயத்தில் (04) வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே, மின்சார சபையின் பொறியியலாளர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கடந்த மூன்று மாதங்களாகப் பெய்த தொடர் மழையின் பயனை மக்களுக்கு வழங்குவதற்கு, இலங்கை மின்சார சபை செயற்பட்டு வருவதாகவும், அதற்கமைவாக நீரினால் மின்சாரம் உற்பத்தி செய்வதன் மூலம் கிடைக்கும் இலாபம் நிச்சயமாக பொதுமக்களுக்கே கிடைக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மின்னுற்பத்திக்கான செலவுகளை முகாமைத்துவம் செய்வதற்காகவே, கடந்த ஆண்டு இரண்டு முறை மின் கட்டணம் அதிகரிக்கப்பட்டன. எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மின்னுற்பத்தி தொடர்பான செலவுகள் குறித்த விபரங்களை, இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவிடம் முன்வைப்போம் என்றும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

**வாசகர்களே!**

உங்கள் பிரதேசத்தில் இடம்பெறவுள்ள விழாக்கள், பாடசாலை நிகழ்வுகள், பாடசாலை அறிமுகம், அரச, தனியார் விழாக்கள் மற்றும் அவிபிருத்தி திட்டங்கள், கலாசார நிகழ்வுகள், மத நிகழ்வுகள் எதுவாயினும் எமது பத்திரிகை ஊடாக முழுப் பக்கத்தில் பிரசுரிக்க முடியும்.

அவ்வாறு தேவையுடயோர் 071 89 666 13 எனும் இலக்கத்திற்கு அழைக்கவும்!

உதயம்

# சு.க. வில் மீண்டும் சந்திரிக்கா



முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மீண்டும் இணைவதற்கு சம்மதம் வெளியிட்டுள்ளார் என கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் மீண்டும் இணைந்துகொள்வதை குறிக்கும்வகையில் நாளை காலிமுகத்திடலில் பண்டாரநாயக்க சிலைக்கு அருகில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கலந்துகொள்ளவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

கட்சியின் தற்போதைய தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன கட்சியின் மத்திய குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரத்தை சந்திரிகா குமாரதுங்கவிற்கு வழங்க முன்வந்துள்ளார், எனினும் சந்திரிகா குமாரதுங்க இது குறித்து இன்னமும்பதிலளிக்கவில்லை எனவும் சுதந்திரக்கட்சி வட்டாரங்கள்தெரிவித்துள்ளன.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு கட்சியில் சீர்திருத்தங்களை முன்னெடுக்கும் நோக்கத்தின் ஒரு பகுதியாக முன்னாள் ஜனாதிபதி மீண்டும் கட்சிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார் எனவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

முன்னாள் ஜனாதிபதிக்கு கட்சியில் வழங்கப்படவுள்ள பதவி அதிகாரங்கள் குறித்த இறுதி தீர்மானத்தை எடுப்பதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுகுழுவினதும் மத்திய குழுவினதும் கூட்டங்கள் நாளை இடம்பெறவுள்ளதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வங்காளதேசத்தில் பொதுத்தேர்தல்!

வங்காளதேசத்தில் இன்று பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது. அங்கு 4-வது முறையாக பிரதமர் ஷேக் ஹசீனா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அண்டை நாடான வங்காளதேசத்தில் இன்று பொதுத்தேர்தல் நடைபெறுகிறது. இதில் தொடர்ந்து 4-வது முறையாக பிரதமர் ஷேக் ஹசீனா வெற்றி பெறுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, ஒரு நடுநிலை அரசாங்கத்தை நிறுவிய பிறகு தேர்தலை நடத்த வேண்டும் என எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்தன.

இதற்கு ஆளும் கட்சி மறுப்பு தெரிவித்ததால், முக்கிய எதிர்க்கட்சியான பங்களாதேஷ் தேசியவாத கட்சி நாடு தழுவிய போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தது. இந்த தேர்தலை புறக்கணிப்பதாக அக்கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான கலீதா ஜியா அறிவித்தார். இதனால் சட்டம், ஒழுங்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் இருப்பதாக கருதி அவர் வீட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இந்நிலையில், கலீதா ஜியா ஆதரவாளர்கள் நாடு முழுவதும் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். சிட்டகாங், காசிபூர் நகரில் வாக்குச்சாவடி மையங்களாக அமைக்கப்பட்ட 5 பள்ளிக்கூடங்களுக்கு கலவரக்காரர்கள் தீ வைத்தனர்.

கடந்த 16 மணி நேரத்தில் 4-க்கும் மேற்பட்ட தீ வைப்பு சம்பவங்கள் அரங்கேறியதாக தீயணைப்பு சேவை புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுத்தேர்தல் நடைபெறும் சூழலில் தேர்தல் ஆணையத்தின் தேர்தல் செயலி செயலிழந்துள்ளதாக தகவல் வெளியானது.

எதிர்க்கட்சிகள் புறக்கணிப்பு மற்றும் தேர்தல் செயலி செயலிழப்பு ஆகியவற்றுக்கு இடையே பலத்த பாதுகாப்புடன் அங்கு தேர்தல் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

### செங்கடல்...

(முன் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்படும் என்று கூறினார்.

அல்-ஹூதி பிபிசிக்கு அளித்த பேட்டியில் வெள்ளிக்கிழமை கருத்து தெரிவித்தார்.







AMAZON COLLEGE
294, 2nd Floor, Galle Road, Colombo 04, Sri Lanka
+94114 386 126 | info@amazoncollege.lk
/amazoncollegelk | www.amazoncollege.lk

www.uthayam.lk
# உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JANUARY 07
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

## முஸ்லிம்களது கல்விப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு முன்னுரிமை அளிக்கப்படுமா?

2019 ஆம் ஆண்டில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னர் முஸ்லிம் சமூகம் நீண்ட நெடுங்காலமாக அனுபவித்து வந்த பல உரிமைகள் பறிக்கப்பட்டன. அந்த உரிமைகளை மீண்டும் பெற்றுத்தருமாறு முஸ்லிம் சமூக இயக்கங்கள், அரசியல்வாதிகள் விடுத்த கோரிக்கைகள் பதவியிலிருந்த மற்றும் பதவியிலிருக்கும் அரசாங்கங்களுக்கு செவிடன் காதில் ஊதிய சங்கு போன்றே இருந்தது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் ஈடுபட்ட சில முஸ்லிம்களை காரணம் காட்டி சமூகம் அனுபவித்து வந்த சிவில் உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகள் தொடர்பாக முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் சில மாதங்களுக்கு முன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக் கொண்டு வந்திருந்தது. இவற்றுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தருவதாக தன்னை சந்தித்த முஸ்லிம் பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி வாக்குறுதியளித்திருந்தார். பல மாதங்கள் கடந்தும் இவற்றுக்கான தீர்வுகள் கிட்டவில்லை. கடந்த வாரம் குருநாகல் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கு பற்றிய ஜனாதிபதி இப்பிரச்சினைகளுக்கு இன்னும் மூன்று மாதங்களுக்குள் தீர்வைப் பெற்றுத் தருவதாக தெரிவித்திருந்தார். அங்கு பேசிய ஜனாதிபதி சிங்கள மக்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கப்பட்டுள்ளன. தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு இன்னும் தீர்வு வழங்கப்படாதிருப்பதாக குறிப்பிட்டிருந்தார்.

முஸ்லிம் சமூகம் முன்வைத்துள்ள பிரச்சினைகளில் பாதுகாப்பு, சமயம், கல்வி தொடர்பாக பல பிரச்சினைகள் உள்ளடக்கியுள்ளன. கல்வி தொடர்பான பல பிரச்சினைகள் நீண்ட காலமாக தீர்க்கப்படாதுள்ளன. மௌலவி ஆசிரியர் நியமனம் 20 வருட காலமாக வழங்கப்படாதிருக்கின்றன. அரபுக் கல்லூரிகளில் இருந்து வெளியேறிய பலநூறு மௌலவிகள் ஆசிரியர் நியமனம் கிடைக்காது காத்திருக்கின்றார்கள். அல்-ஆலிம் பரீட்சையில் சித்திபெற்றவர்களுக்கே மௌலவி ஆசிரியர் நியமனம் வழங்கப்படுகின்றது. கடந்த பல வருடங்களாக அல்-அலீம் பரீட்சை கூட நடத்தப்படாதிருக்கின்றது.

கல்விக் கல்லூரிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்ற போதும் இஸ்லாம் பாட ஆசிரியர் விண்ணப்பங்கள் கோரப்படாதிருக்கின்றன. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப சங்கங்கள் கல்வியமைச்சர் சுசில் பிரேம்ஜயந்தவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் இஸ்லாம் பாட ஆசிரியர் விண்ணப்பம் கோரினாலும் அதில் புறக்கணிப்பு இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. இக்குறைப்பாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு மாறி மாறி பதவிக்கு வந்த கல்வியமைச்சர்கள் கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாதிருக்கின்றன.

இவ்வாண்டு ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி முஸ்லிம்கள் எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் அக்கறை காட்டவேண்டும். கடந்த20வருடகாலமாகமுஸ்லிம்சமூகம்இந்தவிடயத்தில்ஏமாற்றப்பட்டுள்ளது. இனியும் ஏமாற்றப்படாமலிருப்பதற்கு அக்கறை காட்டவேண்டும்.

குறிப்பாக சிங்கள மொழியில் படிக்கும் முஸ்லிம் மாணவர்களுக்கு இஸ்லாம் படிப்பதற்கு வசதியில்லாதுள்ளது. தேசிய கல்விக் கல்லூரிகளில் இஸ்லாம் பாட நெறியினை சிங்களத்தில் ஆரம்பித்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம். சிங்களத்திலும், தமிழிலும் இஸ்லாம் பாடத்தைப் போதிப்பதற்கு சுமார் 1500 வெற்றிடங்கள் இருப்பதாக அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் கல்வியமைச்சரின் கவனத்துக்குக் கொண்டுவந்துள்ளது. 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற சாதாரண தரப் பரீட்சையில் 2590 மாணவர்கள் இஸ்லாத்தில் சித்தி பெறவில்லை. அதேபோன்று 4305 மாணவர்களில் 13.48 சதவீதமான மாணவர்கள் வெறுமனே சாதாரண தர சித்தியினையே பெற்றிருக்கின்றார்கள். உண்மையிலேயே இந்த புள்ளி விபரங்களைப் பார்க்கும்போது ஆசிரியர்கள் இன்றி மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றியதைக் காணமுடிகின்றது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம் கல்விமைச்சர் கலாநிதி சுசில் பிரேம் ஜயந்தவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் முஸ்லிம் சமயபபாட ஆசிரியர் விண்ணப்பம் கோரலில் பல புறக்கணிப்புக்கள் இடம்பெறுவதாக சுட்டிக்காட்டியுள்ளது. இக்குறைப்பாடுகள் உடனடியாக நிவர்த்தி செய்வதற்கு கல்வியமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறி மாறி பதவிக்கு வந்த கல்வியமைச்சர்கள் மௌலவி ஆசிரியர் நியமனம் தொடர்பாக அளித்த வாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படாதுள்ளது. இவ்வாண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முஸ்லிம்களது கல்விப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக் கொடுப்பதற்கு முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் அக்கறை காட்டவேண்டும். கடந்த 20 வருட காலமாக இந்த விடயத்தில் முஸ்லிம் சமூகம் ஏமாற்றப்பட்டுள்ளது. இனியும் ஏமாற்றப்படாதிருப்பதற்கு அக்கறை காட்டவேண்டும்.



சுஐப் எம்.காசிம்



# எதிர்பார்க்கப்படும் தேர்தல்
## சிறுபான்மை தலைமைகளுக்கு திரிசங்கு!

தேர்தலுக்கான ஆண்டு பிறந்துள்ளது. எனினும், முதலில் நடைபெறும் தேர்தல் எதுவென்பதில்தான் குழப்பங்கள். இதுகுறித்த ஊகங்களால் ஊடகங்கள் குழம்பியுள்ளன. அரசியல்வாதிகள், வாக்காளர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் குழப்பத்தில் உள்ளனர். பொருளாதாரத்தின் பிடியிலிருந்து மீள எழமுயலும் தறுவாயில், இப்படியொரு தேர்தல் தேவையா? என்றும் சிலர் சிந்திக் கின்றனர். வலுத் துப் போயுள்ள அரசியல் போட்டி, வளைத்துப்பிடிக்க முயலும் ஆட்சி, அதிகார ஆசைகள் இப்படிச் சிந்திப்போரை கண்டுகொள்ளவில்லை. தேர்தலே வேண்டுமென்ற பிடிவாதம் வலுத்து வருவதாலும், மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு அழைப்பு விடுப்பாரென்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஜனாதிபதித் தேர்தலுக்கான ஆயத்தங்கள், காய்நகர்த்தல்கள் எதிர்பார்த்த வெற்றியைத் தராதுள்ள நிலையிலுங்கூட ஜனாதிபதித் தேர்தலுக்கு துணிவாரா ரணில்? பிரித்தாளும் பிரித்தானியாவைப் போல காய்களை நகர்த்தும் ரணிலின் தந்திரங்கள் இம்முறை பெரிதாகக் கைகூடவில்லை. இதனால்தான், எந்தத் தேர்தலை நடத்தலாமென சிந்திக்கிறார்.

புத்தாண்டு தந்த அடுத்த குழப்பமாக சிறுபான்மைக் கட்சிகளின் தடுமாற்றங்கள் உள்ளன. தென்னிலங்கை களங்களை நோட்டமிடும் நுணுக்கம் இத்தலைமைகளுக்கு இல்லை. கடைசியாக நடந்த (2019) ஜனாதிபதித் தேர்தலிலும் இதுவே நிகழ்ந்தது. ராஜபக்‌ஷக்களை ஆதரிப்பதில்லை என்ற இறுமாப்பில் இத்தலைமைகள் செயற்பட்டதால் தென்னிலங்கையை நாடிபிடிப்பதில் தவறிழைத்தன. ஊடகங்களின் அளவுக்கதிகமான கற்பனைகளால் இத்தலைமைகள் கவரப்பட்டிருக்கலாம். இதே தவறுகள் இம்முறையும் நடக்கக்கூடாதென்றே இந்தத் தலைமைகள் விரும்புகின்றன. அதிலும் முஸ்லிம் தலைமைகளுக்கே அதிக விருப்பம். சாதாரண நிலைமைகளிலேயே தேசிய நீரோட்டத்தையும், தென்னிலங்கைக் களங்களையும் நாடிபிடிக்கும் வல்லமை இல்லாத இத்தலைமைகள், இம்முறை நிலவும் சமபலம் அல்லது தெற்கின் மறைமுகமான களங்களையா கண்டறியப்போகின்றன? இதனால்தான், பாராளுமன்றத் தேர்தலை இத்தலைமைகள் முதலில் விரும்புகின்றன.

இரண்டு ஆதாயங்களுக்காகவே இந்த எதிர்பார்ப்புக்கள். ஒன்று, கட்சிக்கு துரோகம் இழைத்தோரை தோற்கடித்தல், ஏனையது ஜனாதிபதித் தேர்தலில் கூட்டுச்சேர்வதற்கான தேசியக் கட்சியை அடையாளங்காணல்.

முஸ்லிம் தலைமைகள் விரும்புவதைப்போல பொதுத் தேர்தல் நடந்தால் இத்தலைமைகள் போட்டியிடுவது எப்படி? தென்னிலங்கையில் சஜித்தின் செல்வாக்கை நம்பிக் களமிறங்குமா? அல்லது தனித்துவம் காப்பதற்காக தனித்துப் போட்டியிடத் துணியுமா?

கூட்டு வைக்கப்போகும் தேசியக் கட்சி நிறைவேற்று அதிகாரத்தைக் கைப்பற்றுமா? என்ற சந்தேகம் உள்ள நிலையில் தனித்துக்களமிறங்குவதுதான் சிறந்தது.

ஆனால், தனியாகச் சென்று எத்தனை ஆசனங்களை வெல்வது? முஸ்லிம் தலைமைகளுக்குள் நிலவும் போட்டிகளை விடவும் கட்சிக்குத் துரோகமி ழைத்தோரை தோற்கடிக்கும் வியூகங்களே இத்தேர்தலில் பிரதானமாகப்போகின்றன.

இக்கட்சிகளைப் பொறுத்தவரையில் சகல தலைமைகளுக்கும் இவ்வியூகம் அவசியப்படுகிறது. எனவே, இவ்வியூகங்களில் இணக்கப்பாடு ஏற்பட்டால், முஸ்லிம் கட்சிகளின் பொதுக்கூட்டணியை அமைப்பதற்கும் வழிதிறக்கலாம்.

இவ்வாறான ஒரு கூட்டு, கட்சிகளின் விசுவாசத்தை விலை பேசியோருக்கு கட்டாயம் சங்கடத்தையே ஏற்படுத்தும்.

பொதுவான ஜனாதிபதி வேட்பாளரைப் பற்றி தமிழர் தரப்பு சிந்திக்கையில், பொதுத் தேர்தலில் பொதுவான கூட்டணி பற்றியாவது முஸ்லிம் தலைமைகள் சிந்திப்பதே சிறந்தது. புதிதாகத் தெரிவாகும் எம்.பிக்கள் கட்சியின் விசுவாசத்தை பாதுகாப்பதற்கான பயிற்சிக் களமாகவும் இப்பொதுக்கூட்டு அமையலாம். மற்றும் ஜனாதிபதியாக போட்டியிட வுள்ளவருக்கு நிபந்தனை விதிக்கவும் இப்பலம் பயன்படலாம். ஆனால், எதிரியின் எதிரி நண்பனென்ற நிலைமைகளே உள்ளன. ராஜபக்‌ஷக்களின் மொட்டுக்கு முட்டுக்கொடுக்கும் ரணிலின் அரசியலால் இக்கட்சிகளுக்கு ஏற்பட்ட திண்டாட்டமே இது. முதலில், ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட்டால் இத்திண்டாட்டம் அதிகரித்து தலைமைகளைத் திணறடிக்கும். இதனால், கட்சிகளுக்குள் பல பிளவுகள் ஏற்பட்டு ரணிலுக்கு வாசியாகவும் அமையும். இந்தப் பிளவுகளில் கச்சிதமாக காய்நகர்த்துவோரே அரசியலில் பிழைப்பர். எனவே, பிழைப்பு அரசியலை கைவிடும் வரைக்கும் சில பிழையான கணிப்பீடுகள் இருக்கவே செய்யும்.

## அல்மினாரா; மாவட்டத்தில் தொடர்ந்தும் சாதனை



(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை அல்மினாரா முஸ்லிம் வித்தியாலயத்தில் இருந்து தற்போது வெளியாகியுள்ள தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 18 மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் தமிழ் மொழி மூலம் அதிக மாணவர்கள் இவ்வருடமும் இப்பாடசாலையிலிருந்து சித்தியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்....

அத்துடன் கடந்த பல வருடங்களாக இப்பாடசாலையிலிருந்து அதிக மாணவர்கள் சித்தியடையும் சாதனையை தொடர்ந்து நிலைநாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இச்சாதனைகளுக்காக தொடர்ந்தும் தியாக உணர்வுடன் பணியாற்றி வரும் பாடசாலை ஆசிரியர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழு பழைய மாணவர் சங்கம் பழைய மாணவர் அமைப்பு நலன் விரும்பிகள் அனைவருக்கும் பாடசாலை அதிபர் எம்.இசட்.எம முக்தார் தனது இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இம்மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பாராட்டு விழாக்களை ஏற்பாடு செய்துள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார்

# சொல்லோணாத் துன்பங்கள் எங்கும் மரண ஓலங்கள் காஸா திகில் அனுபவங்கள்...

## விவரிக்கிறார் காஸாவிலிருந்து திரும்பிய பாத்திமா ரிகாஸா!



சமீஹா சபீர்

மூன்று மாதங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் இஸ்ரேல் – காசா போரில் இதுவரைக்கும் 22ஆயிரம் பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்களும் உயிரிழந்துள்ளனர். பல பேரை காணவில்லை என்கிற நிலையும் தற்போது காசாவில் உருவாகி உள்ளது.

உலகில் முதலாம், இரண்டாம் யுத்ததிற்கு பிறகு மிக மோசமாக, மனிதாபிமானமற்ற முறையில் நடந்து கொண்டிருக்கும் யுத்தம் என்றால் அது இஸ்ரேல் – காசா யுத்தம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் பலஸ்தீனில் இருந்து இரண்டு குடும்பங்கள் 9 சிறுவர்கள் உட்படட 11 பேர் நாட்டிற்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கையை சேர்ந்த இரண்டு பெண்கள் குடும்ப சூழ்நிலை, வறுமை காரணமாக தொழில் நிமிர்த்தம் மத்திய கிழக்கு நாடுகளுக்கு சென்றுள்ளார்கள் . அங்கே பலஸ்தீனர்களுடன் ஏற்பட்ட நட்பில் திருமணம் செய்து கொண்டு பலஸ்தீனுக்கு சென்றுள்ளார்கள்.

அங்கே அவர்கள் பல வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வந்துள்ளனர்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இஸ்ரேல் – காசா போர் காரணமாக இவ்விரு குடும்பங்களும் பல இன்னல்களுக்கும், பொருளாதார சிக்கல்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர்.

இந்த யுத்த சூழ்நிலையில் தங்கள் குழந்தைகளை வைத்துக் கொண்டு பலஸ்தீனில் வசிக்க முடியாது என்று அவ்விரு குடும்பங்களும் பலஸ்தீனில் உள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டு நாட்டிற்கு வந்துள்ளனர்.

கடந்த 2ஆம் திகதி செவ்வாய்கிழமை அவர்களுடனான ஊடக சந்திப்பொன்றை இலங்கையில் உள்ள பலஸ்தீன் தூதரகம் ஏற்பாடு செய்திருந்தது.

அவர்கள் பலஸ்தீனில் பட்ட துயரங்களை, அனுபவங்களை, பகிர்ந்து கொள்வதற்காக அவர்களுடனான நேர்காணல் ஒன்றை பதிவு செய்திருந்தேன்.

கேள்வி : உங்களுடைய பெயர் ?
பதில் : பாத்திமா ரிகாசா

கேள்வி : இலங்கையில் உங்களுடைய சொந்த இடம் எது?
பதில் : தெமட்டகொடை

கேள்வி : உங்களுடைய கணவர் ?
பதில் : அவர் பலஸ்தீனை பிறப்பிடமாக கொண்டவர்.

கேள்வி : எத்தனை குழந்தைகள் ?
பதில் : நான்கு பிள்ளைகள்
கேள்வி : எத்தனை வருடங்களாக காசாவில் வசிக்கின்றீர்கள் ?
பதில் : 5 வருடங்களாக.

கேள்வி : காசாவில் எந்தப் பகுதியில் இருந்தீர்கள் ?
பதில் : நான் இருந்தது வடக்கு காசாவின் ஷஃரா எனும் பகுதி. அது இஸ்ரேலின் எல்லைப்பகுதி. ஆனால் நாங்கள் வெளியே வந்தது ரபா எல்லைப் பகுதியால்.



கேள்வி: நீங்கள் அங்கிருந்து எவ்வாறு தப்பி வந்தீர்கள் ?
பதில்: ஒக்டோபர் 7ஆம் திகதி யுத்தம் ஆரம்பித்த போது நான் அங்குள்ள இலங்கை எம்பசிக்கு அறிவித்தேன். நான் பிள்ளைகளோடு இலங்கைக்கு போக வேண்டும் என்று ...

2021 ல் யுத்தம் நடந்த போதும் நான் அவர்களுக்கு அறிவித்தேன். அப்போது கொரோனா பிரச்சனை இருந்ததால் இலங்கைக்கு வர முடியாமல் போய் விட்டது .

இப்போ சொன்ன போது அங்கே உள்ள இலங்கை தூதரகம் நாங்கள் இங்கே வருவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து தந்தார்கள் .

கேள்வி : இஸ்ரேலிய இராணுவம் 2014 ஆம் ஆண்டு நடாத்திய பெரிய தாக்குதலுக்கு பின் இப்போது தொடராக பெரிய தாக்குதலை நடாத்தி கொண்டு இருகிறார்கள் .

அதிகமான குழந்தைகள் அங்கே இறந்து கொண்டு இருக்கின்றார்கள் . நான்கு குழந்தைகளுக்கு தாயான நீங்கள், உங்களது மன நிலை எவ்வாறு இருந்தது ?

பதில் : அந்த மனநிலையை எவ்வாறு சொல்வதென்றே எனக்கு தெரியவில்லை. எந்த நேரமும் பயத்துடனேயே இருந்தோம். தண்ணீர் இல்லை, மின்சாரம் இல்லை . பிள்ளைகளுக்கு 3 நேரமும் உண்பதற்கு உணவு இல்லை. சீரான தூக்கமில்லை.

பிள்ளைகள் பசியால் அழுவார்கள்.. வீட்டில் ரொட்டி சுட கரண்டு, தண்ணீர் எதுவுமே இல்லை.. அந்த நேரத்தில் பக்கத்து பேக்கரியில் ரொட்டி சுட்டு கொடுப்பார்கள். நான் நீண்ட நேரமாக வரிசையில் நின்று ரொட்டி வாங்கிக் கொண்டு வந்து பிள்ளைகளுக்கு கொடுப்பேன்.

எங்கள் வீட்டில் இருந்த காலம் இந்தளவு பிரச்சனை இல்லை. வெளியே போகச் சொன்ன நேரம் நாங்கள் பிள்ளைகளுடன் ரோட்டில் தான் நின்றோம் .

ஒரு இரவு எங்களை வீட்டை விட்டு வெளியே போகச் சொன்னார்கள். பிள்ளைகளை எடுத்துக் கொண்டு எங்கே போவது என்றே தெரியவில்லை .. வீதியெல்லாம் இருட்டு. போன் ƒாழநெ) லைட்டும் போடக்கூடாது என்று சொன்னார்கள்.

வீதியில் இறங்கி தக்பீர் சொல்லிக் கொண்டு ஓடினோம்... போய் பாடசாலை ஒன்றில் தஞ்சமடைந்தோம்..

அங்கேயும் .. இந்த பாடசாலையில் தங்க வேண்டாம்.. இங்கேயும் அடிக்குறாங்க... நீங்க எங்க சரி வேற .. கடலோர பகுதிக்கு போங்க என்று போகச் சொல்லி விட்டார்கள். நாங்கள் கடல் பகுதிக்கு போகவில்லை

அப்புறம் எல்லோரும் நடந்து கொண்டு பலஸ்தீனில் உள்ள யுனிவர்சிட்டிக்கு வந்தோம் .

ஒரு நாள் அங்கு தங்கினோம். அப்புறம் அந்த யுனிவர்சிட்டிக்கும் அடிக்க தொடங்கினார்கள். இப்போது அந்த யுனிவர்சிட்டி முழுதாக அழிக்கப்பட்டு விட்டது

அப்புறம் ரபா எல்லையில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு வந்தோம்.

கேள்வி: ரபா எல்லைக்கு எதில் வந்தீர்கள்?
பதில்: ஒரு கார் ஒன்றை ஹயர் பேசி வந்தோம் ... வழமையாக கொடுக்க வேண்டிய பணத்தை விட அதிகமாகவே கேட்டார்கள் .... பெற்றோல் இல்லாததனால்... கேஸ் பாவித்துதான் வண்டி ஓட்டுகிறார்கள்.

ரபா அல் அதவியா என்ற பாடசாலைக்கு வந்து சேர்ந்தோம். அந்த பாடசாலைக்கு பின்புறமாகத்தான் என் கணவரின் தாயின் வீடு இருந்தது . அங்கேதான் தங்குவோம் என்று வந்தோம். ஆனால் அங்கேயும் தங்க முடியாத நிலையால் பாடசாலையிலேயே தங்கினோம்.

அப்புறம் எனது கடைசி மகனுக்கு பாஸ் போர்ட் இருக்கவில்லை. அதை ஏற்கனவே



தொடர்ச்சி 13 ம் பக்கம் பார்க்க....

# இனிப்பும் கசப்பும்

வைஸ்

## கட்டாக்காலியாகத் திரியும் மத்ரஸாக்கள் கட்டுப்பாட்டுக்குள் வர வேண்டும்

இன்று நாட்டிலேயே பல நூறு மத்ரஸாக்கள் காணப்படுகின்றன. பெரிய முஸ்லிம் ஊர்களில் இருந்த ஒரு மத்ரஸா, இன்றைக்கு ஊருக்கு இரண்டாகி, மூன்றாகி அதிகரித்து பிரதான பிரபல நகரங்களில் நான்கு, ஐந்தாக மாறிவிட்டது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. முதலில் கொள்கை அடிப்படையிலாகும். முதலில் அமைக்கப்படும் மத்ரஸா, எமது நாட்டில் காணப்படும் ஏதாவது ஒரு தஃவா இயக்கத்தின் கொள்கையை மாத்திரம் பின்பற்றுவதாலும் மற்றைய தஃவா இயக்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பதாகவும் மாறியவுடன் மற்றைய தஃவா இயக்கம் இந்த மத்ரஸவுக்கு எதிராகிவிடும். அதுவும் ஒரு மத்ரஸா அந்தப் பிரதேசத்தில் ஆரம்பித்து விடும். எனவே, ஒன்று இரண்டாகிவிடும். அது மட்டுமல்லாமல், அவை ஒன்றுக்கொன்று எதிராகச் செயற்பட ஆரம்பித்து விடுவர்.

இன்னும் பல காரணங்களும் உண்டு. ஓர் உலமா ஊரில் ஒரு தனவந்தரைப் பிடித்து அவரைப் புகழ்ந்து, வாழ்த்தி அந்த தனவந்தரின் உதவியுடன், அவரின் தலைமையில் ஒரு மத்ரஸாவை ஆரம்பித்து விடுவார். அந்தத் தனவந்தருக்கு தலைமைப் பதவியும் புகழும் வரும். இன்னுமொரு உலமா இதே வேலையைச் செய்து இன்னுமொரு தனவந்தரைப் பிடித்துக் கொண்டு இன்னுமொரு மத்ரஸாவை ஆரம்பித்து, அதில் அந்த தனவந்தரை தலைவராக்கிக் கொள்வார். இப்படியாக உலமாக்களின் தேவைக்காக, உலமாக்களின் தொழிலுக்காக, உலமாக்களின் வருமானத்துக்காகவும் தலைமைப் பதவிக்கு ஆசை கொள்ளும் தனவந்தர்களுக்கும் புதிய புதிய மத்ரஸாக்கள் ஆரம்பமாகிவிடும்.

நடாத்தப்படும் மத்ரஸாக்களின் அதிபர்கள் அல்லது உலமாக்களுக்கும் மத்ரஸா நிர்வாகத்திற்கும் அல்லது மத்ரஸா தலைவர்களுக்கும் இடையில் பிணக்குகள், பிரச்சினைகள் ஏற்பட்டு விட்டால் அந்த உலமா அல்லது அதிபர் அங்கிருந்து விலகிச் செல்வார்.

அவ்வாறு விலகிச் சென்றவர், அந்த ஊரில் அல்லது வேறு ஊரில் உள்ள தனவந்தரைப் பிடித்து இன்னுமொரு மத்ரஸாவை ஆரம்பிப்பார்.

இவ்வாறு மத்ரஸாக்கள் குட்டி போடும். இதில் ஊர் மக்களிடையே இருந்த ஒற்றுமை இல்லாமல் போவதுமுண்டு. ஒற்றுமையாக வாழ்ந்த மக்கள், பிரிந்து குழுக்களாவதுமுண்டு. தஃவா அமைப்புக்களின் கொள்கை ரீதியான பிரச்சினைகளில் அகப்பட்டு, ஒற்றுமையைப் இழப்பதுமுண்டு. எனினும், வெற்றியடைவது குறிப்பிட்ட உலமாக்கள் மாத்திரமே! அவர்கள் மேல் சொன்ன எந்த அமைப்பிலாவது தமக்கென மத்ரஸாக்களை உருவாக்கிக் கொள்வர். மார்க்கத்தின் பெயரை முன்வைத்து மக்களிடையே பிரிவினைகளை, போட்டிகளை உருவாக்கி விடுவர்.

மத்ரஸாக்களைப் பதிவு செய்வது மிக இலகுவான காரியமாக இருக்கிறது. முஸ்லிம் கலாசார விவகாரத் திணைக்களம் கேட்கும் ஆவணங்களை அனுப்பி வைத்தவுடன் மத்ரஸா பதிவு செய்யப்பட்டுவிடும். அந்த ஊரில் வேறு மத்ரஸாக்கள் உள்ளனவா?, கட்டாயம் அங்கு மத்ரஸா தேவையா?, அந்த ஊரில் மத்ரஸா நடத்தும் அளவுக்கு முஸ்லிம் சனத்தொகை உண்டா? என்று பார்ப்பதில்லை.

யாரையாவது பிரபல்யங்களைப் பிடித்து மத்ரஸாக்களைப் பதிவு செய்து கொள்வர்.

மத்ரஸாகளுக்கு பிள்ளைகளை அனுமதிக்க பொதுவான தகுதிகள் இல்லை. கற்பிக்க பொதுவான பாடத்திட்டம் இல்லை. அடிப்படைத் தகுதிகள், பொதுவானதாக இல்லை. வயதில்லைக் கட்டுப்பாடு இல்லை.

ஒவ்வொரு மத்ரஸாவுக்கும் ஒவ்வொரு திட்டம் ஒவ்வொரு கொள்கை. ஒவ்வொரு வயதுக் கட்டுப்பாடு. நிர்வாகம் நினைத்தபடி தீர்மானித்துக் கொள்ளும். பொதுவான திட்டம் இல்லை.

பொதுவான பாடத்திட்டம் இல்லை. அந்தந்த மத்ரஸாவின் அதிபர் அல்லது உஸ்தாத் நினைப்பது தான் பாடத்திட்டம். எனவே, ஒவ்வொரு மத்ரஸாவுக்கும் ஒவ்வொரு வகையான பாடத்திட்டம்.

அவர்களே பரீட்சைகளை நடத்துவர். விடைத்தாள்களை அவர்களே திருத்துவர். புள்ளி வழங்குவர். சித்திகளைத் தீர்மானிப்பர். மௌலவி பட்டம் வழங்குவர்.

எனவே, எல்லா மத்ரஸாக்களிலும் வழங்கும் மௌலவிப்பட்டங்கள் ஒரு தரத்தில் இருக்க வழியில்லை. தான் தாம் இத்தனை மௌலவிகளை உருவாக்கினோம் ஹாபிஸ்களைஉருவாக்கினோம் என்று சொல்லிக் கொள்வர். அதன் மூலம் விளம்பரம் தேடிக் கொள்வர். ஆனால், அதில் எந்த அளவு திருப்திப் படலாம்.

முதலில் பாடத்திட்டம் ஒன்று முழு நாட்டு மத்ரஸாக்களுக்கும் வேண்டும். பல வருடங்களாக முஸ்லிம் விவகாரத் திணைக்களம் மற்றும் முஸ்லிம் அமைச்சர்கள் முயற்சி எடுத்த போதும் அரச அங்கீகாரம் பெற்ற பாடத்திட்டம் இதுவரை இல்லை.

அந்தப் பாடத்திட்டத்தை அமைக்கும் இறுதிக்கட்டம் வந்தபின் தஃவா இயக்கங்களுக்கு இடையிலான கொள்கைப் பிரச்சினை கடைசியாக எழுந்து விடும். எனவே, விடயம் முடியாது தொடர்கதை தான். இது விடயமாக நானும் ஒரு காலத்தில் சம்பந்தப்பட்டு செயற்பட்டேன். ஆனால், இறுதி முடிவு காலம் தள்ளுவதுதான்.

எனவே, திணைக்களம் முன்வந்து பாடத்திட்டத்தை அமைக்க வேண்டும். இது விடயத்தில் தஃவா அமைப்புக்களின் தலையீடுகளுக்கு இடமளிக்கக் கூடாது.

அந்தப் பாடத்திட்டத்தை அரச அனுமதி பெற்ற, நாட்டுக்குப் பொதுவான பாடத்திட்டமாக மாற்ற வேண்டும்.

மத்ரஸா அனுமதிக்கான வயதெல்லை, தகுதி, தராதரம் வகுக்கப்பட வேண்டும். இதையும் திணைக்களம் திட்டமிட்டு வகுக்க வேண்டும்.

எனது தனிப்பட்ட கருத்து என்னவெனில், ஆறாம், ஆண்டு வரை அல்லது ஐந்தாம் ஆண்டு வரை பிள்ளைகள் பள்ளிக்கூடங்களில் கற்க வேண்டும். அரச பாடசாலைகளிலோ, தனியார் பாடசாலைகளிலோ அதுவரை பொதுவான கல்வியைப் பெற வேண்டும். அதன் பின்னர் அந்தப் பாடசாலை விடுகைப் பத்திரம் பெற்றவர்கள் மாத்திரம் மத்ரஸாக்களுக்கு அனுமதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் அவர்களது மொழி அறிவு, பொது அறிவு என்பன ஓரளவுக்கு வரும்.

ஏனென்றால், இங்குள்ள அநேக உலமாக்களுக்கு இலக்கணத்துடனும் சரியான உச்சரிப்புடனும் பொதுமக்கள் வழக்கில் உள்ள தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் பயான்கள் செய்ய முடியாதுள்ளது. இவற்றைப் பாடசாலைக் கல்வி மூலம் ஓரளவு கற்றுக் கொள்ளலாம்.

அத்தோடு, இவ்வாறு பாடசாலைக் கல்வியைப் பெற்றபின் வருபவர்களின் பொதுக் கல்வியும் மத்ரஸாக்களால் இலகுவில் தொடரலாம். அவர்களை சாதாரண தர, உயர்தரப் பொதுப்பரீட்சையில் சித்தி பெறச் செய்து பல்கலைக் கல்வியையும் பெற வழியமைக்கலாம். இதன் மூலம் மத்ரஸாக்களின் தரமும் அதிகரிக்கும்.

மற்றையது மௌலவிப் பரீட்சையை அரச பரீட்சைத் திணைக்களம் நடாத்தும் பரீட்சையாக மாற்ற வேண்டும். தற்போது அல்–ஆலிம் பரீட்சை அரச பரீட்சையாக உள்ளது. அதேபோன்று மௌலவிப் பரீட்சையும் அரச பரீட்சை திணைக்கள பரீட்சையாக்கப்பட வேண்டும். இது விடயத்தில் திணைக்களம் முன்வந்து, அமைச்சரவை அனுமதியுடன் செய்து கொள்ளலாம்.

இப்படிச் செய்து விட்டால் இந்தத் தராதரத்தை அரச பொதுப் பரீட்சை தராதரத்துடன் சமப்படுத்த முயற்சிக்கலாம். வழங்கப்படும் சித்தியும் பெறுபேறும் அரச அங்கீகாரம் பெற்றதாகவும் நாட்டுக்கே பொதுவானதாகவும் ஆகிவிடும் ஏற்கப்படுவதாக ஆகிவிடும்.

மத்ரஸாக்களில் அரபுக்கு மேலதிகமாக இன்னும் ஒரு மொழியும் கற்பிப்பது அவசியமாக உள்ளது. நாட்டில் வழங்கும் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் ஏதாவது ஒன்றிலாவது சிறந்த மொழியறிவு, இலக்கண அறிவு வேண்டும்.

மத்ரஸா உஸ்தாத் அதாவது ஆசிரியர்கள் பயிற்சி முறை ஒன்று கொண்டு வரப்பட வேண்டும். இதற்கெனத் திணைக்களம் முன்வந்து மத்ரஸா ஆசிரியர் பயிற்சி நெறியொன்றை ஆரம்பிக்க வேண்டும். இங்கு மாணவர்களின் மனநிலை பற்றிய அறிவும் வழங்கப்பட வேண்டும். மாணவர்களோடு நடந்து கொள்ளும் முறை, தண்டனைகள், மனித உரிமைகள், நாட்டின் சட்டங்கள், இவற்றின் எல்லைகள் போன்ற விடயங்களிலும் இந்த ஆசிரியர் பயிற்சியில் அடங்க வேண்டும்.

சுருங்கக் கூறின், பள்ளி நிர்வாகத்துக்கு வக்புசபை இருப்பது போன்று மத்ரஸா நிர்வாகம், பதிவு, பரிசீலனை, பரீட்சை போன்றவற்றைக் கவனிக்க சபையொன்று அல்லது அரச அதிகாரம் பெற்ற அமைப்பு திணைக்களத்தால் அமைக்கப்பட வேண்டும். இதற்கு கல்வித் துறையில் அனுபவமிக்க நிர்வாகிகள் நியமிக்கப்பட வேண்டும்.

# சர்வதேச நீர் மாநாடு 2023













நீர் மற்றும் சுகாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்துதல் எனும் தொனிப்பொருளின்கீழ் சர்வதேச நீர் மாநாடு 2023, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் 2023 டிசம்பர் 14 மற்றும் 15ஆம் திகதிகளில் இரத்மலானையில் அமைந்துள்ள நீர் மற்றும் சுகாதாரத்திற்கான சிறந்த மையத்தில் நடாத்தப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்தன ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் நடைபெற்ற இந்நிகழ்வில், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையின் அபிவிருத்திகள் தொடர்பில் உரையாற்றினார்.

அத்துடன் நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் சமரதிவாகர, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிஷாந்த ரணதுங்க ஆகியோரும் இதன்போது உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக கலந்துகொண்ட உலக வங்கியின் சர்வதேச நீர் இயக்குனர் சரோஜ் குமார் ஜா, நீர் பாதுகாப்பு, பசுமை நெகிழ்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான உலகளாவிய நடவடிக்கை நிகழ்ச்சிநிரலை நிறுவுவதற்கான உலகளாவிய கூட்டு நடவடிக்கை குறித்த தனது அறிவு, அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பகிர்ந்துகொண்டார்.

நிபுணத்துவ அமர்வுகள், வர்த்தக அமர்வுகள், தொழில்நுட்ப அமர்வுகளுடன் கூடிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கருத்தரங்கம், கண்காட்சி மற்றும் களவிஜயம் ஆகியனவும் இம்மாநாட்டின்போது நடைபெற்றன.

நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையில் மாற்றத்தை துரிதப்படுத்தும் வகையிலான புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, காலநிலை மாற்றம் மற்றும் நீர் வள முகாமைத்துவம் ஆகியவற்றுக்கான நிலையான தீர்வுகள் பற்றிய பயனுள்ள விரிவுரைகள் உலகெங்கிலுமுள்ள தொழில்துறை தலைவர்கள் மற்றும் நிபுணர்களினால் நிபுணத்துவ அமர்வுகளின்போது நிகழ்த்தப்பட்டன. வர்த்தக அமர்வுகளின்போது நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையின் முன்னணியில் ஒத்துழைக்க வர்த்தக மற்றும் முதலீட்டு வாய்ப்புகளை அதிகரிப்பது தொடர்பில் ஆராயப்பட்டன.

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் எட்டாவது ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு கருத்தரங்கும் இதன்போது நடைபெற்றன. இது நீர் மற்றும் துப்புரவேற்பாட்டு துறையில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஒரு ஊக்கியாக செயற்பட ஒரு தளத்தை உருவாக்கியது. இதன்போது கேள்வி-பதில் நிகழ்ச்சியும் மற்றும் குழு விவாதங்களும் நடைபெற்றன.

நடந்து முடிந்த சர்வதேச நீர் மாநாடு, சமீபத்திய தொழில்நுட்பம், சேவைகள் மற்றும் பிற முன்னேற்றங்கள் பற்றிய அறிவை கற்றுக்கொள்வதற்கும் பகிர்ந்து கொள்வதற்கும் சிறந்ததொரு வாய்ப்பாகும். இது பிராந்திய ரீதியில் நாட்டின் நீர் மற்றும் சுகாதாரத் துறையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தாக்கத்தை விரைவுபடுத்துகிறது.

# மக்கள் சேவைக்காகவே நாங்கள் கூட்டணியமைக்கிறோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



ஐக்கிய மக்கள் சக்தி பரந்த கூட்டணியை உருவாக்கி வருவது யாருக்கும் அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்கல்லவென்றும், சிறந்த கொள்கைகள் மற்றும் மக்கள் சேவையின் அடிப்படையிலையே இவ்வாறு இணைத்துக் கொள்வதாகவும்,இதனை தவறாக புரிந்து கொண்டு அரசாங்கத்துடன் தொடர்புடைய சில ஊடகங்கள் பணத்தை பெற்றுக்கொண்டு மக்களை தவறாக வழிநடத்தும் வகையில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் எந்த அமைச்சரும் சுகபோகங்களை அநுபவிக்க முடியாது என்றும்,மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து மக்களுக்கு தன்னலமற்ற சேவை ஆற்ற வேண்டும் என்றும், தேவையில்லாமல் வெளிநாட்டு பயணங்களில் சுற்றுவது போன்ற வழக்கமான பொழுது போக்குகளை அவர்களால் மேற்கொள்ள முடியாது என்றும்,அமைச்சுப் பதவிகளில் விரக்தி மனப்பான்மை எழுந்தாலும் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின் இவ்வாறான தியாகங்களைச் செய்ய வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

மக்கள் பக்கம் நின்று பார்க்கும் போது புத்தாண்டு உதயமாகுவதில் தனக்கு சந்தோச நிலைப்பாடு எழுவதாக இல்லை என்றும்,தானும் தனது குழுவும் நபர்களை அங்கிருந்து இங்கு இழுத்தெடுக்கும் விளையாட்டு களையோ அல்லது ஆடம்பர ஹோட்டல்களில் இருந்து பணப் பைகளை பரிமாறிக்கொள்வதன் மூலம் நட்பு வட்டார முதலாளித்துவத்தை செயல்படுத்துவதற்கோ அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை ஆற்றும் நோக்கிலயே இந்த கூட்டணியை உருவாக்கும் பணிகளை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தென் மாகாண முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான ஷான் விஜேலால் டி சில்வா ஐக்கிய மக்கள் சக்திக்கு தனது ஆதரவினைத் தெரிவிக்க வந்து கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக் கொண்ட சந்தர்ப்பத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# காத்தான்குடி மில்லத் பெண்கள் பாடசாலையின் முப்பெரும் நிகழ்வு



(நூருல் ஹுதா உமர்)

காத்தான்குடி மில்லத் பெண்கள் உயர்தரப் பாடசாலை 95 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மாணவர் பரிசளிப்பு மற்றும் ஆசிரியர் கௌரவிப்பு ஆகிய முப்பெரும் விழா காத்தான்குடி ஹிஸ்புழ்ழாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி ஜெஸீமா முஸம்மில் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புழ்ழாஹ் பிரதம அதிதியாகவும், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம். அமீர் மற்றும் காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்கா சபீன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், காத்தான்குடி பிரதேச கோட்டக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஜி.எம். ஹக்கீம் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் புலமைப்பரிசில் சித்தி பெற்ற மாணவ, மாணவிகள், க.பொ.த சாதாரணதரத்தில் 9ஏ, 8ஏ, 7ஏ சித்தி பெற்ற மாணவிகளும், க.பொ.த (உயர்தரத்தில்) கலை மற்றும் வர்த்தகப் பிரிவில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவிகள் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கப்பட்டதுடன் அதிபர் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலை நிர்வாகத்தால் கௌரவிக்கப்பட்டனர். அதிபர் பாடசாலை நிறைவேற்றுக் குழுவாலும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist, Chennai - Tamilnadu, India)

# ஆப்கானை கட்டியெழுப்பும் அந்நிய முதலீடுகள்!



தாலிஃப் என்றால் பஷ்தூன் மொழியில் மாணவர்கள் (Students) என்று பெயர். இந்த மாணவர்கள் தான் பயங்கரவாதத்தின் அடையாள கூறியீடாக சர்வதேச சமூகம் முதன்மைப்படுத்தியது.

சர்வதேச நாடுகளின் கலாச்சாரம், இராணுவ தொடர்புகள் மற்றும் எல்லையோர பிரச்சினைகளை தீர்த்து வைப்பதில் பெரியண்ணன் மனப்பான்மையுடன் தன்னிச்சையாக நடந்து வந்த அமெரிக்கா தான் இந்த இயக்கம் வருவதற்கு மூல காரணம் என்றால் நீங்கள் நம்பித்தான் ஆக வேண்டும் . சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் நுழைந்து சண்டையிட்ட காலத்தில் அந்த நாட்டிற்கு எதிராக முஜாஹிதீன் அமைப்பை உருவாக்கி அவர்களுக்கும் பாகிஸ்தானுக்கும் பெரிய அளவில் பங்களிப்பை செய்தது உறவுகள் வலுவான நிலையை நோக்கி பயணித்து வருகிறது. அதேநேரத்தில் சீன ஆப்கானிஸ்தான் ஊடாக பாகிஸ்தானின் கவுதர் துறைமுகம் (Gwadar port) வாயிலாக வியாபாரத்தை பெருக்கும் வகையிலான மும்முனை புரிதல் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது குறிப்பிடத்தக்கது. அதே நேரத்தில் ஜலாலாபாத் --காபூல் இரண்டிற்கும் இடையிலான மிகப்பெரிய அளவிலான சாலைகளை கட்டமைக்க சீன முதலீடுகளை மேற்கொண்டு வருகின்றது. அதே போல் ஆப்கானிஸ்தான் ஏராளமான உள்நாட்டு உற்பத்தி சாலைகள், துறைமுகங்கள் மற்றும் மிகப் பெரிய வணிக வளாகங்கள், உள்நாட்டு ரயில்வே கட்டமைப்புகள், பாகிஸ்தான் மற்றும் சீனா, ஆப்கானிஸ்தான் இணைந்து செயல்பட ஏற்புடைய வகையில் மத்திய ஆசியா பொருளாதார கூட்டாளியாக பெருந்தொகையான பணத்தை சீனா எல்லா வகையிலும் முதலீடு செய்து உள்ளது. சீனாவின் கனவு திட்டமான பெல்ட் அண்டு ரோடு இன்ஷியடிவ் சர்வதேச சாலை பாகிஸ்தான், ஆப்கான் வழியாகவே செல்கிறது என்பதும் கூடுதல் செய்தியாக உள்ளது.அதே நேரத்தில் சீனாவின் இந்த பெருந் தொகை மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டின் கட்டமைப்புகள் மிகப் பெரிய அளவில் வளரும் என்பதே சர்வதேச நாடுகளின் பார்வையாகும்.

இது போன்ற மிகப் பெரிய அளவில் ஆன சர்வதேச மற்றும் உள்நாட்டு கனிம வள ஒப்பந்தங்கள் மூலம் உள்நாட்டில் வேலை வாய்ப்புகள் பெருகும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. அதேநேரத்தில் இந்த ஒப்பந்தத்தை ஒட்டி ஆப்கானிஸ்தான் அரசு பல்வேறு வகைகளில் பங்குகளை தங்கள் வசப்படுத்திக் கொண்டது. மொத்த தங்கம் வருமனாததில் 56 சதவீதம் பங்குகளையும், காப்பர் கனிம வயல்கள் மூலம் வரும் வருமானங்களில் 12 சதவீதத்தையும், 20, சதவீத பங்குகளை ஈய கனிமங்கள் சார்ந்த வயல்களிலும், 13 சதவீதம் பங்குகளை ஒவ்வொரு கனிமம் சாந்த இரும்பு தாது சுரங்கங்களிலும் ஆப்கானிஸ்தான் அரசு கையகப்படுத்தி வைத்திருக்கிறது. இதன் மூலம் அரசின் வருமானம் இரட்டிப்பாகும் என்று தெரிகிறது. குறிப்பாக பங்குகள் மூலம் வரும் வருமானம், கார்ப்பரேட் கம்பெனிகளின் மூலம் எடுக்கப்படும் கனிமங்களுக்கான விவசாய துறையின் உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும். இது கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடையும் நிலையில் ஏற்றுமதியின் வளர்ச்சி பன்மடங்கு பெருகும்.அதே நேரத்தில் விவசாயம் துறை மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும் என்பதே சர்வதேச முகமையாளர்களின் கருத்தாக இருக்கிறது.

இரண்டாவதாக மிகவும் முக்கியமான மின்சார உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் விவசாயம் துறை மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடையும் . தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தான் நாட்டில் விவசாயம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வரும் தொழிலாளிகள் கையால் ஆன பழைய முறைகளை தான் பின்பற்றி வருகின்றனர். மின்சார உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் வளர்ச்சிகள் அதிகரிக்கும் சூழலில் ஆப்கானிஸ்தான் நாட்டில் விவசாய துறையின் உற்பத்தி பன்மடங்கு அதிகரிக்கும். இது கிட்டத்தட்ட 2 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு வளர்ச்சி அடையும் நிலையில் ஏற்றுமதியின் வளர்ச்சி பன்மடங்கு பெருகும்.அதே நேரத்தில் விவசாயம் துறை ஏற்பட்ட நிலையில் அங்கு வேலை செய்த ஆப்கானியர்களின் வேலை இழப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது. இதன் மூலம் அந்த பகுதியில் வாழும் தொழிலாளிகளின் குடும்பங்கள் பெரும் வறுமை தாண்டவமாடியது. இந்த திட்டத்தின் பயனாக பெரும்பாலான உழைக்கும் வர்க்கம் வேலைகள் பெருகும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

இந்த திட்டங்கள் தொடர்பான செயல்பாடுகள் பல்வேறு துறைகளில் 50,000 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் புவியியலாளர்கள், பொறியியலாளர்கள், சுரங்கத் தொழிலாளர்கள், இயந்திர ஆபரேட்டர்கள், போக்குவரத்து பணியாளர்கள், உபகரண உற்பத்தியாளர்கள், தளவாட நிபுணர்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கான வேலைகள் அதிகரிக்கும்.

மேலும், சுரங்க நிறுவனங்கள் தங்கள் ஒப்பந்தங்களின் ஒரு பகுதியாக சமூக மேம்பாட்டு முயற்சிகளில் முதலீடு செய்ய கடமைப்பட்டுள்ளனர். அதாவது தாலிபான்கள் எடுத்த இந்த முயற்சியின் மூலம் உள்ளூர்

அமெரிக்கா என்பது தான் வரலாற்று உண்மை.

அதேநேரத்தில் செப்டம்பர் 11... 2001 ஆம் ஆண்டு அமெரிக்க இரட்டை கோபுரம் தாக்கப்பட்ட சம்பவத்திற்கு பிறகு பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான போர் என்று அரை கூவல் விடுத்து ஏறத்தாழ 20 ஆண்டுகள் போரிட்டது அமெரிக்கா. அந்த போரில் தனது வல்லாதிக்க ஆயுதங்களை எல்லாம் தோரா.. புரா மலை குன்றுகளில் வீசிய அமெரிக்கா ஒரு கட்டத்தில் தன்னை விட்டால் போதும் என்றாகி அடிப்படையில் ஆப்கானிஸ்தானில் இருந்து மண்ணை கவ்விய நிலையில் வெளியேறியது தான் மிச்சம் என்பதை தவிர வேறொன்றும் இல்லை. இந்த போரில் தோல்வி அடைந்த அமெரிக்கா இதற்காக 150 இலட்சம் கோடி ரூபாய்களை செலவழித்து, பல ஆயிரக்கணக்கான அமெரிக்கா வீரர்கள் பலியாகிய நிலையில் தான் நேட்டோ படைகள் விட்டு, விட்டு புறமுதுகிட்டு ஓடினார்கள் என்பதே உண்மையாகும்.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தான் நாட்டில் ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் 2020 ஆம் ஆண்டில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி கூ20 பில்லியனாக இருந்தது மற்றும் 2021 இல் தலிபான்களின் ஆட்சியின் கீழ் கூ16 பில்லியனாகக் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஜிடிபியை உயர்த்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாவிட்டால், 2022ல் ஆப்கானிஸ்தான் நாட்டின் ஜிடிபி 14 பில்லியன் டாலராகக் குறையும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் தற்போது தாலிபான்கள் ஆட்சிக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் கழிந்த பின் அந்த நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக முன்னேற்றங்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் குறித்தும் நாம் தெளிவாக கவனிக்க வேண்டும் என்பதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

2022ம் ஆண்டு சீனா தனது கூட்டாளிகளில் ஒருவராக ஆப்கானிஸ்தான் நாட்டை சேர்த்து கொண்டது. இந்த ஆண்டு சீன பெட்ரோலியம் மற்றும் எரிவாயு நிறுவனங்கள் (CAPEIC) மூலம் 540 மில்லியன் அமெரிக்க டாலர்களை முதலீடு செய்துள்ளது. இது ஒரு நீண்ட கால முதலீடாக இருக்கும் என்று கூறப்படுகிறது. அதுவும் ஏராளமான அளவில் ஆப்கானிஸ்தானில் இருந்து உணவு பொருட்களை எந்த வரி கட்டணமும் இல்லாத நிலையில் சீனா இறக்குமதி செய்து வருகிறது. இந்த நிலையில் தான் ஆப்கானிஸ்தான் உடனான சீன பொருளாதார மிகப்பெரிய நிறுவனங்களில் ஒன்றான கோசின் (Gochin) 10 பில்லியன் அமெரிக்க டாலர்களை கனிம வயல்களில் முதலீடு செய்ய திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.இது போன்ற அந்நிய முதலீடுகள் மூலம் ஆப்கானிஸ்தான் மிகப் பெரிய அளவில் பொருளாதார வலிமை பெற சாத்தியக்கூறு உள்ளதாக கூறப்படுகிறது.

உலகில் வளம் நிறைந்த நாடுகளில் ஆப்கானிஸ்தான் மிகவும் முக்கியமான தேசம் என்பதில் எந்த ஐயமும் இல்லை. இங்கே 1200 க்கு மேற்பட்ட தாதுக்கள் நிறைந்துள்ளன சுரங்கங்கள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 100 ட்ரில்லியன் அமெரிக்கா டாலர் மதிப்பு என்பது குறிப்பிடத்தக்கது. இந்த தாதுக்கள் குறிப்பாக தங்கம், குரோமைட், விலைமதிப்பற்ற நவரத்தின கற்கள், லித்தியம், காப்பர், இரும்பு, லீட், ஜிங், நிலக்கரி, இயற்கை எரிவாயு, பெட்ரோலியம், விலைமதிப்பற்ற கிரானைட் கற்களை கொண்ட ஏராளமான சுரங்கங்கள், இதனைத் தவிர்த்து இன்னும் அறியப்படாத ஏராளமான கனிம வளங்கள் நிறைந்த ஒரு செழிப்பான தேசம் தான் ஆப்கானிஸ்தான் என்பது மிகுந்த ஆச்சரியத்தை பலருக்கு ஏற்படுத்தி இருக்கும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

அதேநேரத்தில் தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தான் நாட்டில் 7 க்கு மேற்பட்ட தாது சுரங்கங்களை கண்டறிந்து பணிகளை துவக்க நடவடிக்கை எடுக்க ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்த பணிகளில் ஈடுபட ஆப்கானிஸ்தான் உள்நாட்டு நிறுவனங்கள் மற்றும் சீனா போன்ற வெளிநாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாக முதற்கட்ட தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான் அரசு நீண்ட கால ஒப்பந்தம் அடிப்படையில் பல்வேறு கனிமங்கள் நிறைந்த சுரங்கங்களை குத்தகைக்கு விட்டுள்ளது. இந்த குத்தகை 5 லிருந்து 30 ஆண்டுகளுக்கு என்கிற அடிப்படையில் விடப்பட்டுள்ளது.தற்போதைய விடப்பட்டுள்ள புரிதல் அடிப்படையில் ஆன காண்ட்ராக்ட் மூலம் அந்த நாட்டின் வளர்ச்சி மிகப் பெரிய அளவில் இருக்கும் என்று நம்பப்படுகிறது. இந்த ஒப்பந்தம் தங்கம், காப்பர், இரும்பு தாதுக்கள், லீட் மற்றும் ஜிங் வகை கனிமங்கள் என்று ஏராளமான கனிம வயல்கள் தோன்றப்பட்டு வருகிறது. இதன் இன்றைய சந்தை மதிப்பு சர்வதேச அளவில் 6 பில்லியன் டாலர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய ரூபாய் மதிப்பில் 52 ஆயிரம் கோடி ரூபாய் என்பது மிகப்பெரிய பெரிய தொகையாக உள்ளது.

வரி விதிப்பு மூலம் வருமானம் மூலம் ஆப்கானிஸ்தானிற்கு மிகப் பெரிய அளவில் வருமானத்தை ஈட்டித் தரும் என்பது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் உந்துதலாக அமைந்துள்ளது . இதன் மூலம் போக்குவரத்து வளர்ச்சி, சாலைகள் கட்டமைப்பு, வாங்கும் திறன், நகர்புற கட்டமைப்பு வளர்ச்சி என மிகப் பெரிய அளவிலான வளர்ச்சியை நோக்கி ஆப்கானிஸ்தான் தற்போது பயணித்து கொண்டிருக்கிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

இந்த வளர்ச்சி மூலதனம் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் சிறு குறு தொழிற்சாலைகளின் வளர்ச்சி அதனைத் தொடர்ந்து வேலைவாய்ப்புகள் அபரிமிதமாக பெருகும் என்பதில் சந்தேகமில்லை.

குறிப்பாக ஆப்கானிஸ்தான் நாட்டில் முதலீடு மூலம் வரும் பங்குகளின் வருமானத்தில் 13 சதவீதத்தை அந்த நாடு 500 கிலோ வாட் மின்சாரம் உற்பத்திக்கு செலவழிக்கப்படும் . அதாவது ஆப்கானிஸ்தான் நாட்டில் அன்றைய நாடான துர்க்மெனிஸ்தான் நாடு இதற்கு பெரிய அளவில் உதவி புரியும் என்று தெரியவருகிறது. துர்க்மெனிஸ்தான் நாட்டில் உற்பத்தியாகும் 500 கிலோவாட் மின்சாரத்தை பெரும் ஆப்கானிஸ்தானில் இதன் மூலம் உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப ஆற்றல் பெருகும். இத்தனை தொடர்ந்து ஆப்கானிஸ்தான் நாட்டில் ஏராளமான மலைகள் மற்றும் நீர் வளங்கள் இருப்பதால் சிறிய மற்றும் குறுகிய, பெரிய அளவிலான மின்திறன் டிரான்ஸ் மீட்டர்களை உருவாக்கி மின்சார உற்பத்தியை அதிகப்படுத்த வாய்ப்புகள் பெருகும். இத்தனை தொடர்ந்து கட்டமைப்புகள், தொழில்நுட்ப அறிவு, மின்சாரம் உற்பத்தி, வேலை வாய்ப்புகள், தொழிற்சாலைகளின் பெருக்கம் என்கிற அடிப்படையில் ஆப்கானிஸ்தான் வளர்ச்சியை நோக்கி தான் தற்போது பயணித்து கொண்டிருக்கிறது

இரண்டாவதாக மிகவும் முக்கியமான மின்சார உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் விவசாயம் துறை மிகப் பெரிய அளவில் வளர்ச்சி அடையும் . தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தான் நாட்டில் விவசாயம் சார்ந்த பணிகளில் ஈடுபட்டு வரும் தொழிலாளிகள் கையால் ஆன பழைய முறைகளை தான் பின்பற்றி வருகின்றனர். மின்சார உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் தொழில்நுட்ப முதலீடுகள் மற்றும் வளர்ச்சிகள் அதிகரிக்கும் சூழலில் ஆப்கானிஸ்தான் நாட்டில் மூலம் வேலை வாய்ப்புகள் பெருகும் என்பதே சர்வதேச முகமையாளர்களின் கருத்தாக இருக்கிறது.

எந்தவொரு நாட்டின் வளர்ச்சிக்கும் அடிப்படை தேவையான மின்சாரம் மிகுந்த தேவையான ஒன்றாக உள்ளது. இந்த நிலையில் ஆப்கன் பல்வேறு துறைகளில் வளர்ந்து வரும் நிலையில் அதற்கு மிக முக்கியமான காரணியாக அமைந்துள்ள மின்சார உற்பத்தியில் மிகுந்த அக்கறை செலுத்தி வருகிறது.துர்க்மெனிஸ்தான் நாட்டில் இருந்து பெற்று வரும் மின்சாரத்தை தொடர்ந்து தனது அண்டைய நாடான தஜகஸ்தான் மற்றும் உஸ்பெகிஸ்தான் நாட்டில் இருந்து குறைந்த விலையிலான மின்சாரத்தை பெறும் வகையில் பேச்சு வார்த்தையை தொடர்ந்துள்ளது.இது போன்ற அடிப்படை கட்டமைப்புகள் மற்றும் மின்சாரம் சார்ந்த உற்பத்தி, தொழில்நுட்ப முதலீடுகள் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டின் வளர்ச்சி அபரிமிதமான வளர்ச்சியை வரும் காலங்களில் சந்திக்கும் என்று சர்வதேச பொருளாதார நிபுணர்களின் கருத்தாக உள்ளது.

இந்த நிலையில் காபூலை தளமாகக் கொண்ட ஆப்கானிஸ்தான் இன்வெஸ்ட் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட ஈயம் மற்றும் துத்தநாகம் திட்டத்தின் அடிப்படையில் அண்டை நாடான துர்க்மெனிஸ்தானில் இருந்து மின்சாரம் இறக்குமதி செய்வதை உறுதி செய்யும் வகையில் இந்த ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 500-கிலோவோல்ட் மின் இணைப்பு திட்டத்தில் மீதமுள்ள 13 சதவீதத்தை நிறைவு செய்யும் கூடுதல் பொறுப்புடன் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இது போன்ற ஆக்கபூர்வமான செயல்பாடுகள் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள ஏறக்குறைய அனைத்து தொழில்நுட்ப பூங்காக்கள் தட்டுப்பாடு இல்லாத மின்சாரத்தை பெரும் சூழ்நிலை உருவாகி வகிக்கிறது. இதன் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் வரும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்யவும், நாட்டில் உள்ள அனைத்து தொழில் நுட்ப பூங்காக்கள் 12 மணி நேரத்தில் இருந்து 24 பணி நேரமும் தட்டுபாடு இல்லாத மின்சாரத்தை பெரும் வாய்ப்பை தாலிபான்கள் அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

தாலிபான்கள் 2021 ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு இந்த சுரங்கத் திட்ட பணியில் இருந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் துணை ஒப்பந்தக்காரர்களுக்காக பணி தடை சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் வகையில் பல்வேறு தொலைநோக்கு சிந்தனை திட்டங்களை ஆப்கானிஸ்தான் தாலிபான் அரசு வகுத்துள்ளது. இதன் விளைவாக கல்வி, சுகாதாரம், மற்றும் பிற துறைகளில் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற திட்டமிட்ட முன் முயற்சிகள் மூலம் வறுமையைப் போக்குவதற்கும் , வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

இந்த நிலையில் காபூலை தளமாகக் கொண்ட ஆப்கானிஸ்தான் இன்வெஸ்ட் நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்ட ஈயம் மற்றும் துத்தநாகம் திட்டத்தின் அடிப்படையில் அண்டை நாடான துர்க்மெனிஸ்தானில் இருந்து மின்சாரம் இறக்குமதி செய்வதை உறுதி செய்யும் வகையில் இந்த ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் வாயிலாக 500 – கிலோவோல்ட் மின் இணைப்பு திட்டத்தில் மீதமுள்ள 13 சதவீதத்தை நிறைவு செய்யும் கூடுதல் பொறுப்புடன் இந்த நிறுவனம் செயல்பட்டு வருகிறது. இது போன்ற ஆக்கபூர்வமான செயல்பாடுகள் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் உள்ள ஏறக்குறைய அனைத்து தொழில்நுட்ப பூங்காக்கள் தட்டுப்பாடு இல்லாத மின்சாரத்தை பெரும் சூழ்நிலை உருவாகி வகிக்கிறது. இதன் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டில் வரும் எரிசக்தி தேவைகளை பூர்த்தி செய்யவும், நாட்டில் உள்ள அனைத்து தொழில் நுட்ப பூங்காக்கள் 12 மணி நேரத்தில் இருந்து 24 பணி நேரமும் தட்டுபாடு இல்லாத மின்சாரத்தை பெரும் வாய்ப்பை தாலிபான்கள் அரசு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது.

ஆப்கானிஸ்தான் நாட்டில் இரும்புச் சுரங்கங்களின் வளர்ச்சி, அந்த நாட்டின் தொழில்துறை வளர்ச்சிக்கும் மிகப் பெரிய அளவில் பயனளிக்கும், ஏனெனில் சுரங்கங்களில் வெட்டி எடுக்கும் இரும்பு தாது மூலம் நாட்டில் உள்ள ஏராளமான எஃகு தொழிற்சாலைகளுக்கு இரும்புத் தாதுவை அந்த நிறுவனங்கள் வழங்கும். அதே நேரத்தில், ஈயச் சுரங்கம் அந்த நாட்டில் உள்ள எட்டு உள்நாட்டு பேட்டரி உற்பத்தி நிறுவனங்களுக்கு நிலையான

தொடர்ச்சி 09 ம் பக்கம் பார்க்க....

# மாணவர்களின் சிறப்பான பெறுபேறு ஊருக்கு மட்டுமல்ல கற்பித்த ஆசிரியரோடு அதிபருக்கும் பெருமை சேர்த்துள்ளது

## விருது வழங்கும் விழாவில் என்.எம்.அமீன்

(எம்.எஸ்.எம்.ஸாகிர், நதீரா வசூக்)

தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் 2022/23 க.பொ.த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களையும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் அவர்களை வழிநடாத்திய அதிபர் மற்றும் ஆசிரியர்களையும் அத்தோடு, நோபல் உலக சாதனை பெற்று கிராமத்துக்கே பெருமை தேடிக் கொடுத்த எழுத்தாளரும் கவிதாயினியும் ஆசிரியையுமான திருமதி நதீரா வசூக் ஆகியோருக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி செவ்வாய்க் கிழமை தல்கஸ்பிடிய முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது அஷ்ஷேஹ் தும்ரி சலாஹியின் கிராத் ஓதலுடன் ஆரம்பமானது. அதைத் தொடர்ந்து தேசிய கீதம் இசைக்கப்பட்டதோடு, சரியாக மு.ப 9.26 இற்கு இலங்கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு19 ஆவது வருட நினைவாக ஒரு நிமிட நேர மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த அன்றைய சனசமூக நிலையத்தின் ஸ்தாபகரும் மூத்த ஊடகவியளாளருமான என். எம். அமீன் உரையாற்றுகையில்,

இன்று பாராட்டப்பட இருக்கின்ற மாணவர்களது பெறுபேறானது எமது கிராமத்திற்கும் நாட்டுக்கும் பெருமை சேர்ப்பதோடு, அவர்களுக்கான எதிர்காலம் மிகச் சிறப்பானதாக அமைந்திருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இச்சிறப்பான நிலையைப் பெறுவதற்காக அயராது உழைத்த அதிபர் ஆசிரியர்கள் இன்னும் பலபேர் இணைந்தே சிறப்பாக இச்சாதனையை நிலைநாட்டி இருப்பதாகவும் இக்கிராமத்து மக்கள் எல்லோரும் ஒன்றிணைந்தே இயங்குவதாகவும் குறிப்பிட்டார்.

ஆரம்ப காலங்களில் மிகவும் சிரமப்பட்டே கற்றதாகவும் இன்றுபோல் எந்த வசதிகளும் இருக்கவில்லை என்றும்

குறிப்பிட்டதோடு, இன்று எமது கிராமம் சகல வசதிகளையும் கொண்ட கிராமமாகத் திகழ்வதாகவும் குறிப்பிட்டார்.

இன்று இயங்குகின்ற தாஜ்மஹால் நலபுரி சங்கம் 1969 இல் சனசமூக நிலையம் என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்ட போது பள்ளிப் பரிபாலன சபையைத் தவிர வேறு எந்த இயக்கமும் இருந்ததில்லை என்றும் தாங்கள் துரிதமாக இயங்கியதன் காரணமாக அரநாயக கிராம சபையில் முதலாவது முஸ்லிம் சனசமூக நிலையமாக தாஜ்மஹால் சனசமூக நிலையம் காணப்பட்டது என்றும் அதன் மூலம் ஒரு கரம்போட் கிடைக்க அது கிராமத்துப் பிள்ளைகளுக்கு விளையாட வாய்ப்பைக் கொடுக்க கரப்பந்தாட்டம் இன்னும் விளையாட்டுக்களைப் பயிற்றுவிக்க வாய்ப்பாக இருந்ததாகவும் குறிப்பிட்டார்.

இன்று 54 வருடங்களில் அப்பெயர் தஜ்மஹால் நலன்புரிச் சங்கமாக பெயர்மாற்றம் பெற்று பல வெற்றிகளைக் கண்டுள்ளது. இந்த வெற்றிகளில் ஒன்றே இன்றைய பாராட்டு விழா மகிழ்ச்சியடைகின்றேன் என்றும் 54 ஆண்டுகளுக்கு முன்னிருந்த நிலையிலிருந்து இன்று முற்றாக வேறுபட்டு ஒரு அபிவிருத்தி கண்ட கிராமமாக திகழ்வதாகவும் அந்த வகையில் இந்த விழா வெற்றிபெற வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

ஆரம்ப ஸ்தாபகர் என்ற வகையில் நானும் மர்/ஹும் எம்.ஐ.எம் தாஹா ஜேபி மற்றும் பலரும் ஆரம்பித்த இச்சங்கம் அன்று முதல் இன்று வரை சீராக இயங்கி வருவதாகவும் (தாஜ்மஹால் நலம்புரிச் சங்கத்திற்கும்) அதனைக் கொண்டு நடாத்தும் இளைய தலைமுறையினருக்கும் பாராட்டினைத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து, பிரபல வர்த்தகரும் அகில இலங்கை மனித உரிமைகள் சாசன அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி மௌசூம் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன் ஸ்தாபகப் பொருளாளர் ஜே.எம்.அன்வர்தீன் மற்றும் ஓய்வு பெற்ற அதிபர் மஹ்பூப் மற்றும் பாடசாலையின் தற்போதைய அதிபர் ஏ.எஸ். சுபியான் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர். இதேவேளை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர் என விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## தல்கஸ்பிடிய தாஜ்மஹாலுக்கு அகவை 54
## 40 சாதனையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பு


























# காலமான ஞானியர் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மவுலானா உடல் திருச்சி மதறஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமியா யாஸீன் அரபி கல்லூரியில் நல்லடக்கம்


[திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது]

காலமான ஞானியர் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மவுலானா திருஉடல் திருச்சி மதறஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமியா யாஸீன் அரபி கல்லூரியில் நல்லடக்கம் செய்யபட்டது .

காலமான ஞானியர் திலகம் ஜமாலிய்யா அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மவுலானா 03.01.2023 புதன்கிழமை காலை 6 மணி அளவில் கொழும்பில் மருத்துவமனையில் காலமானர். இலங்கையில் அவர்களது சீடர்கள் , ஆஷிகீன்கள் மரியாதை , ஜியாரத் செய்த பிறகு கொழும்பு பள்ளியில் ஜனாஸா தொழுகையில் ஏரளமானோர் கலந்து கொண்டனர் . அவர்களது புகழ் உடல் விமானம் மூலம் திருச்சி விமான நிலையத்தில் வந்து சேர அப்பாஸ் ஷாஜஹான் தலைமையில், ஆலிம் புலவர் ஹுசைன் முகம்மது மன்பஈ, கலீபா.சஹாபுதீன்,கலீஃபா முகம்மது இக்பால், முகம்மது அலி, யாஸீன், அப்துல் ரவூப் இன்னும் ஏராளமான மூரிதின்கள், ஆஷீக்கிகன்கள் சங்கையாக பெற்று சிறப்பு வாகனம் மூலம் திருச்சி வாப்பா நாயகம் இல்லத்திற்கு கொண்டு வந்தனர் .

அங்கு ஆயிரக்கணக்கான பெண் மூரீதின்கள் இறுதி அஞ்சலி செலுத்திய பிறகு மஹ்ரிபு தொழுகைக்குப் பிறகு திருச்சி – திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள ஜாமியா யாஸீன் அரபு கல்லூரிக்கு கொண்டுவரப்பட்டு குழுமியிருந்த பல ஆயிரக்கணக்கான மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் பேராசிரியர் கே. எம். காதர் மொகிதீன் கண்களில் நீர் கசிய உருக்கத்துடன் அஞ்சலி செய்தார்கள். குடும்பத்தார்கள் சையது



ஜமாலிய்யா யாஸீன் அலி மவுலானா, சையது சாஜித் அலி மவுலானா, சையது வாரிசு அலி மவுலானா, சையது ஜாஹித் அலி மவுலானா மற்றும் வந்திருந்த மவுலானா குடும்ப உறவுகளுக்கும் ஆறுதல் கூறினார்கள். அவர்களது உடல் திருச்சிக்கு கொண்டு வரப்பட்டு திருஉடல் திருச்சி மதறஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமியா யாஸீன் அரபி கல்லூரியில் 04.01.2023 வியாழக்கிழமை இஷா தொழுகைக்கு பிறகு நல்லடக்கம் செய்யபட்டது.

# 2024 ஆம் ஆண்டிற்கான மன்னர் சல்மானின் உம்ரா விருந்தாளிகள்



ஹஜ் உம்ரா மற்றும் புனித ஸ்தலங்களைத் தரிசிப்பதற்கான மன்னர் ஸல்மான் பின் அப்தில் அஸீஸ் ஆல் ஸஊத் அவர்களின் விருந்தாளிகள் திட்டம், சவுதி அரேபியாவின் இஸ்லாமிய விவகாரங்கள் அமைச்சினால் முன்னெடுக்கப்படுகின்ற மிக முக்கியமான ஒரு திட்டமாகும். அத்திட்டத்தின் ஒரு கட்டமாக, 2024 ஆம் ஆண்டு உலகெங்கிலுமுள்ள நாடுகளிலிருந்து 1000 பேரை உம்ரா செய்வதற்காக சவுதி அரேபியாவுக்கு அழைத்து வர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன,

இத்திட்டத்தின் முதல் கட்டமாக, கிழக்கு ஆசியாவின் 14 நாடுகளில் இருந்து, 250 உம்ரா விருந்தாளிகள் கடந்த 04ஃ01ஃ2024 மதீனா வந்தடைந்தனர். மலேசியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, தாய்வான், மியான்மார், வியட்நாம், லாவோஸ், ஹொங்கொங், ஜப்பான், புருணை, தாய்லாந்து, தென்கொரியா, கம்போடியா, மன்கோலியா ஆகியவையே அந்த 14 நாடுகளாகும்.

இத்திட்டத்தின் மூலமாக இலங்கையிலிருந்தும் சிலர் பயனடைவார்கள் என்பது உறுதி.

-கலாநிதி M.H.M. அஸ்ஹர் (PhD) -

# சந்தம் சிந்தை கவர்ந்த வலம்புரி கவிதா வட்டத்தின் 95 ஆவது கவியரங்கு

## - சந்தக்கவிமணி கிண்ணியா அமீர் அலி தலைமை -




(ஐ.ஏ. காதிர் கான்)

வலம்புரி கவிதா வட்டத்தின் 95 ஆவது கவியரங்கு, (26) பௌர்ணமி தினம் செவ்வாய்க்கிழமை கொழும்பு, பழைய நகர மண்டபத்தில் நடைபெற்றது.

கவிஞர் "சந்தக்கவிமணி" கிண்ணியா அமீர் அலியின் தலைமையில் கவியரங்கு இடம்பெற்றது. வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுஸைன் நிகழ்வினை நெறிப்படுத்தினார்.

செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் வரவேற்புரையும், பொருளாளர் ஈழ கணேஷ் நன்றியுரையும் வழங்கினர்.

அண்மையில் மறைந்த பேராசியர் செ. யோகராசா, பேருவளையில் வசித்து வந்த கவிஞர் வாழைத்தோட்டம் வசீரின் தம்பி, கவிஞர் ரிஸான் ஸெய்ன், மருதமுனை ஹரீஸாவின் தந்தை பி.எம்.எம்.ஏ. காதர் ஆகியோரும், சுனாமி பேரலையில் (2004) மறைந்தோரும் கவியரங்கில் நினைவு கூரப்பட்டனர்.

கிண்ணியா அமீர் அலியின் தலைமையில் இடம்பெற்ற இச்சிறப்புக் கவியரங்கில், கவிஞர்கள் தமிழ்த் தென்றல் அலி அக்பர், கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், ரவூப் ஹஸீர், இளநெஞ்சன் முர்ஷிதீன், வாழைத்தோட்டம் எம். வசீர், வதிரி சி. ரவீந்திரன், வாசுகி பி. வாசு, ந. தாமரைச் செல்வி, கஸ்ஸாலி அஷ் ஷம்ஸ், பவானி சச்சிதானந்தன், கமர்ஜான் பீபி, சஜ்ஹா அமீன், ராஜா நித்திலன், சிந்தனைப்பிரியன் முஸம்மில், லைலா அக்ஷியா, எஹலியகொட முஸ்னி முர்ஷித், தி. ஸ்ரீதரன், ஆர்.எஸ்.ரஸ்மியா, இ. கலைநிலா, எஸ். தனபாலன், தாட்சாயினி சர்மா, ரகீப் அல் ஹாதி, மினுவாங்கொடை ஏ. சிவகுமார், எம். பி. எம். சித்தீக், சீ. தனுஷிகா ஆகியோர் கவி மழைகளைப் பொழிந்து, இம்முறை கவியரங்கை அலங்கரித்தனர்.

கலாபூஷணம் எம்.எஸ்.எம். ஜின்னாஹ், கலாபூஷணம் மௌலவி ஐ.ஏ. காதிர் கான், மணவை அசோகன், சு. ஜெகதீஸ்வரன், மலாய்கவி டிவாங்ஸோ, ஏ.கே. இளங்கோ, ஏ.டப்ளியூ. அப்துல் அஸீஸ், பர்ஹாத் சித்தீக், ராஹிலா ஹலாம், கே. யோகேஸ்வரி, ரிஸ்மினா ரபீக், கவிதா இளங்கோ, உணர்ச்சிப் பூக்கள் ஆதில் போன்றோர் பூக்களாகப் பரந்து, அரங்கை மேலும் வாசனையூட்டினர்.

வகவத் தலைவர் கவிஞர் என். நஜ்முல் /ஹஸைன் இச்சிறப்புக் கவியரங்கில் கருத்துத் தெரிவிக்கும்போது, "பல தடைகளையும் தாண்டி எமது வகவம், 95 ஆவது அகவையில் காலடி எடுத்து வைத்துள்ளது. இன்னும் ஐந்து மாதங்களில் 100 ஆவது பிறந்த நாளைக் கொண்டாடப்போகிறது என்பதையும் பெருமிதத்தோடு கூறிக்கொள்ள விரும்புகின்றேன். இந்த நிலையில், சிந்தனைக்கு விருந்தாக பல சுவாரஸ்யமான அம்சங்களையும் வகவத்தின் நிழலின் கீழ் கவிதை வடிவில் நாம் ஒழுங்கு செய்துள்ளோம். கவிஞர்களின் பங்களிப்போடு, சிறப்புக் கவிதை மலர் ஒன்றையும் வெளியிடவுள்ளோம் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

# பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் சூரிய மின் சக்தி கருத்திட்டம் அங்குரார்ப்பணம்



(அஷ்ரப் ஏ சமத்)

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியில் (04) புதிய கட்டிடத்தொகுதியில் சூரிய மின் சக்தி கருத்திட்டம் கல்லூரி அதிபர் பழைய மாணவிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பபட்டது. இத் திட்டம் பழைய மாணவிகள் சங்கத்தின் ஒரு முன்எடுப்பாகும்.

பாடசாலை இன்று அதன் வரலாற்றில் மற்றொரு மைல்கல்லை அடைந்திருப்பது உண்மையில் மிகவும் பெருமைக்குரிய விடயமாக இருக்கிறது. பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தில் சூரிய மின் சக்தி திட்டம் கல்லூரி அதிபர் திருமதி நஸ்ரியா முனாஸிடம் கையளிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய கல்லூரி அதிபர் நஸ்ரியா,

பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரியானது எப்போதும் அதனது மாணவர் சமூகத்தின் மத்தியில் புதிய சிந்தனையை வளர்த்து , புத்தாக்கமுடைய மற்றும் சவால்மிக்க கருத்துக்களுடன் முன்னணி வகித்துச் செல்கிறது

பசுமை சக்தியுடன் புதிய யுகத்திற்கான பயணத்திற்கு காலடி எடுத்து வைத்துள்ள இப் பாடசாலையின் பழைய மாணவிகள் சங்கமானது கனவுகளை நனவாக்குவதில் மிகப்பெரும் சக்தியொன்றாக இருந்து வருகின்றது.

இயற்கை மூலவளங்கள் மற்றும் சுற்றாடல் நிலைபேறான தன்மைக்கான விழுமியங்களை கட்டியெழுப்பும் தூர நோக்குடன் பாடசலையின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த திட்டத்தில் 2023 ஆம் ஆண்டுக்காக திட்டமிடப்பட்ட கருத்திட்டங்கள் சூரிய மின் சக்தி கருத்திட்டம் ஒன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இச் சங்கத்தின் சுருசுருப்பாக கரு திட்டத்திற்கான நிதியுதவியை பெற்று நன்கொடையாளர் மாலைதீவு நாட்டின் தொழிலதிபர் அஹமட் ஷியாம் மொஹமட் அவர்கள் ஊடாக சூரிய மின்சக்தி கருத்திட்டத்தின் மூலம் பாடசாலையின் மின்சாரத் தேவைகளுக்கு நிலையான தீர்வொன்றை கொண்டுவருவதில் வெற்றி பெற்றுள்ளார். கருத்திட்ட அமுலாக்கத்தை திருமதி சஹ்ரின் ரஹ்மான ஹமீன் தலைமை தாங்கி முன்னெடுத்தது அது நிறைவேற்று குழுவின் ஒவ்வொரு உறுப்பினரும் ஆதரவளிக்கப்பட்ட துடன் . பௌதிகவியல் பாடத்துறை ஆசிரியர் திரு. எம்.எம். பஸீல் அவர்களினால் தொழில்நுட்ப வழிகாட்டலும் வழங்கப்பட்டது.

07ம் பக்கத் தொடர்ச்சி...

மூலப்பொருட்களை வழங்குவதை உறுதி செய்கிறது . இதன் மூலம் தட்டுப்பாடு இல்லாத மூலப் பொருள் கிடைப்பதால் ஆப்கானிஸ்தான் உள்நாட்டு உள்நாட்டு பேட்டரி உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நிலையில் சர்வதேச நாடுகளுக்கு பேட்டரி ஏற்றுமதி செய்யும் வகையில் வளர்ந்துள்ளது அந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நல்ல செய்தியாக அமைந்துள்ளது.

தாலிபான்கள் 2021 ம் ஆண்டு ஆட்சிக்கு வந்த பிறகு இந்த சுரங்கத் திட்ட பணியில் இருந்த வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்கள் மற்றும் துணை ஒப்பந்தக்காரர்கள் நாட்டை விட்டு வெளியேறினர்.இதன் மூலம் நாட்டில் வேலையிழப்பு ஏற்பட்டது. வேலையிழப்பு ஏற்பட்ட நிலையில் அங்கு வேலை செய்த பெரும்பாலான ஆப்கானியர்களின் வேலை இழப்புகளை சமாளிக்க வேண்டியிருந்தது. இதன் மூலம் அந்த பகுதியில் வாழும் தொழிலாளிகளின் குடும்பங்கள் பெரும் வறுமை தாண்டவமாடியது. இந்த திட்டத்தின் பயனாக தற்போது பெரும்பாலான உழைக்கும் வர்க்கத்தின் வேலைகள் பெருகும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

மேலும், சுரங்க நிறுவனங்கள் தங்கள் ஒப்பந்தங்களின் ஒரு பகுதியாக சமூக மேம்பாட்டு முயற்சிகளில் முதலீடு செய்ய கடமைப்பட்டுள்ளனர். அதாவது தாலிபான்கள் எடுத்த இந்த முயற்சியின் மூலம் உள்ளூர் சமூகங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்படும் வகையில் பல்வேறு தொலைநோக்கு சிந்தனை திட்டங்களை ஆப்கானிஸ்தான் தாலிபான் அரசு வகுத்துள்ளது. இதன் விளைவாக கல்வி, சுகாதாரம், மற்றும் பிற துறைகளில் கூடுதல் வேலை வாய்ப்புகளை உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது போன்ற திட்டமிட்ட முன் முயற்சிகள் மூலம் வறுமையைப் போக்குவதற்கும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் ஆற்றலைக் கொண்டுள்ளன என்பதில் எந்த மாற்றுக் கருத்திற்கும் இடமில்லை.

இது போன்ற சுரங்கத் திட்டங்கள் மற்றும் வளர்ச்சி பணிகளின் விளைவாக ஆப்கானிய அரசாங்கத்திற்கு மற்றொரு முக்கிய பிரச்சினைக்கு விரைவான பொருளாதார ஸ்திரத்தன்மை தீர்வை தாலிபான்கள் எடுத்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் இருந்து நேட்டோ படைகள் வெளியேறிய நிலையில் ஆப்கானிய நாணயத்தின் மதிப்பு மிகப் பெரிய அளவில் வீழ்ச்சி அடைந்தது. இதற்கு மிக முக்கியமான காரணம் என்னவென்றால் ஏராளமான ஒப்பந்தக்காரர்கள் தங்கள் நிறுவனத்தினை கதவடைப்பு செய்து விட்டு நாட்டை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து, ஆப்கானிஸ்தான் வங்கிகளில் டெபாசிட் செய்த நூற்றுக்கணக்கான மில்லியன் டாலர்களை வெளிநாட்டுக் வங்கி கணக்குகளுக்கு விரைவாக மாற்றினார்கள்.

இதன் விளைவாக ஆப்கானிஸ்தான் மிகப் பெரிய வெளிநாட்டு நாணயத் தட்டுப்பாட்டு ஏற்பட்டதால் போராடியது.

இதன் மூலம் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சி ஆப்கானியின் நாணய மதிப்பை எதிர்மறையாக பாதித்தது. அதன் காரணமாக ஆப்கானிஸ்தான் வங்கிகள் திவால் அச்சுறுத்தலை எதிர் கொண்டன. ஆப்கானிஸ்தான் வங்கிகள் (Banking sector) ஆப்கானிஸ்தான் நாணயத்தை காப்பாற்ற அவசர பண நிலைப்படுத்தல் கொள்கைகளை நாட வேண்டியிருந்தது. அது வெற்றி ஓரளவுக்கு பெற்ற நிலையில் நாட்டிற்கு இன்னும் வெளிநாட்டு நாணயம் தேவைப்படும் சூழல் காணப்படுகிறது.

அதே நேரத்தில் சுரங்கத் திட்டங்கள் (mining projects ) நாட்டிற்குள் அந்நிய செலாவணியின் வருகையை அதிகரிக்கத் தயாராக உள்ளன. இதன் மூலம் ஆப்கானிஸ்தான் நாட்டின் ஏற்பட்டுள்ள அமைதி மற்றும் வளர்ச்சி திட்டங்களுக்கு தாலிபான் அரசு எடுக்கும் ஆக்கபூர்வமான செயல்பாடுகள் அயலக முதலாளிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.அதே நேரத்தில் அந்த நாட்டின் ஏழு சுரங்கங்களில் ஒவ்வொன்றும் ஐரோப்பிய மற்றும் ஆசிய பங்குதாரர்களைக் கொண்டுள்ளது. இந்த முதலீட்டாளர்கள் சர்வதேச சந்தைகளுக்கு ஆப்கானிஸ்தான் நாட்டில் உற்பத்தியாகும் தரமான பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு வசதியான நிலையை எடுத்து அதனை அமல்படுத்தும் வகையில் நிலைமையை சாதகமான முறையில் உருவாக்கி உள்ளார்கள். இதன் மூலம் ஆப்கானிஸ்தானிற்கு ஏராளமான அந்நிய முதலீடுகள் மற்றும் வருகின்ற நிலையில் அந்நிய செலாவணி கையிருப்பு அதிகரிக்கும் சூழல் ஏற்படும். இது போன்ற சர்வதேச நாணயங்கள் ஆப்கானிஸ்தானில் தொழில் துறையில் பங்களிப்பை அளித்து வரும் நிலையில் வரும் காலங்களில் ஆப்கானியின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வங்கிகளின் மதிப்பீடு கொண்ட பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது நிச்சயமாக ஆப்கானிஸ்தான் நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டத்தை பலப்படுத்துகிறது.

உண்மையில், தற்போதைய நிலையில் கைச்சாத்திடப்பட்ட பல்வேறு சுரங்க ஒப்பந்தங்கள் ஆப்கானிஸ்தான் பொருளாதார வளர்ச்சிக்கு மிகப் பெரிய அளவில் வளர்ச்சியை ஏற்படுத்தி வருவதாக கூறப்படுகிறது. இது போன்ற அந்நிய முதலீடுகள் மூலம் உள்நாட்டில் வாங்கும் திறன் வெகுவாக அதிகரிக்கும். இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அரசாங்கத்திற்கு மிகவும் தேவையான வருவாயை பன்மடங்கு ஈட்டி தரும் என்பதில் சந்தேகமில்லை. இதனால் ஆப்கானியர்களின் வாழ்க்கை முறை மிகப் பெரிய மேம்படும் உள்நாட்டில் வேலை வாய்ப்புகள் அதிக அளவில் பெருகும். இது ஆப்கானிஸ்தான் நாட்டின் வளர்ச்சிக்கும் மிக முக்கியமான தருணம் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இருக்காது.

# ஏறாவூர் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர். 8

ஏறாவூர் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்:

தற்போது எறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிற்குள் குறுகிய நிலப்பரப்பில் மக்கள் செறிந்து வாழ்ந்து வருவதால் திண்மக் கழிவுகளையும் திரவக்கழிவுகளையும் அகற்றுவதற்கான இடவசதி இல்லை.

அதனால் குடிநீர், இருப்பிடம் உள்ளிட்ட பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை மக்கள் எதிர்நோக்கி வருகின்றார்கள்.

இப்பிரதேசத்தில் சனத்தொகை மரணிப்பவர்களை அடக்கம் செய்ய ஏறாவூர் நகர பிரதேசத்தில் மிகவும் பழமைவாய்ந்த, குறுகிய நிலப்பரப்புள்ள இரண்டு மையவாடிகளே காணப்படுகின்றன.

மழைகாலங்களில் அவைகளைப் பயன்படுத்தமுடியாத நிலை உள்ளது. இதுமட்டுமன்றி மையவாடிகளில் இடவசதி இல்லாததால் மாற்றொழுங்கு செய்வதற்குக் கூட ஏறாவூர் நகர நிருவாகத்தால் இயலவில்லை.

பொதுச் சந்தை அமைப்பதற்கு அரச காணித்துண்டொன்று இல்லை. அதனால் பள்ளிவாசல்களுக்குச் சொந்தமான காணிகளை குத்தகை அடிப்படையில் பெற்றே பொதுச்சந்தை தொகுதி ஒன்றுக்கான கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது. அதுவும் முடிவுறாத நிலையில் பல வருடங்களாக பாழடைந்து காணப்படுகின்றது.

பிரதான வீதி உட்பட முக்கியமான உள்ளக வீதிகளையும் கூட அகலமாக்குவதற்கு முடியாமலுள்ளது. காரணம் அதனால் அநேக குடும்பங்களின் வீடுகளும் செய்வது அவசியமானதொன்றாக இருக்கின்றது.

முஸ்லிம்களை உள்ளடக்காத, மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள, 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் குடிமக்கள் பரந்து வாழ தாராளமாக காணி வசதிகள் இருக்கின்றன.

அதுபோன்று ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவிலும் குடித்தொகையினர் ஓரிடத்தில் செறிந்து வாழ்வதைத் தவிர்ப்பதற்காகவும் பல் சமூகங்களையும் உள்ளடக்கும் வகையிலும் எல்லைகளை மீள் பரிசீலனை செய்து ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவை விஸ்தரிக்க வேண்டும்.

ஏறாவூர் நகர பிரதேச செயலகத்திற்காக பிரேரிக்கப்படும் விஸ்தரிக்கப்பட்ட எல்லைகள்:

வடக்கு: வங்காள விரிகுடா கடலில் தளவாய் கிராம சேவகர் பிரிவின் மேற்கு எல்லையில் தொடங்கி சத்துருக்கொண்டான் எல்லை வரையிலான 08 கிலோ மீற்றர் சவுக்கடி கடல் எல்லை.

கிழக்கு: சத்துருக்கொண்டான் கடல் எல்லையில் ஆரம்பித்து அதன் கிழக்கெல்லை வழியாக அதாவது மட்டக்களப்பு மாநகரசபை எல்லை வழியாக மட்டக்களப்பு வாவி வரையிலான எல்லை.

தெற்கு: மட்டக்களப்பு வாவியில் மட்டக்களப்பு மாநகரசபை எல்லை தொடக்கம் ஏறாவூர்-5 கிராம சேவகர் பிரிவின் மேற்கெல்லையாக உள்ள தாமரைக்குளம் வரையான 03 கிலோ மீற்றர் எல்லை.

மேற்கு: ஏறாவூர்-5 கிராம சேவகர் பிரிவின் மேற்கு எல்லை வழியாக தாமரைக் குளத்தினை ஊடறுத்து ஏறாவூர் நகர சபையில் மேற்கெல்லை வழியாகச் சென்று தளவாய், ஐயங்கேணி கிராம சேவகர் பிரிவுகளின் மேற்கு எல்லையூடாக சவக்கடி கடல் வரை.

விருத்திக்கேற்ப காணி இல்லாமல் இருப்பதே பாரிய பிரச்சினையாகும். அடுத்து வரும் ஒரு சில வருடங்களில் குடியிருக்க நிலம் இல்லாத மனித அவலம் ஒன்று இங்கு உருவாகலாம் என்று அஞ்சப்படுகின்றது.

ஏறாவூரைச் சூழ அமைந்துள்ள "ஏறாவூர்ப்பற்று" பிரதேச செயலகம், மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் நான்கிலொரு பங்கையும் முழு இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஒரு வீதத்தையும் கொண்டுள்ளது. இது மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் 24.08 சத வீதமாகும்.

ஆனால் முஸ்லிம்களுக்கென பிரித்துக் கொடுக்கப்பட்ட ஏறாவூர் நகர பிரதேச செயலகமோ வெறும் 3.745 சதுர கிலோமீற்றரைக் கொண்டுள்ளமையானது இங்கு நடக்கும் இன பாரபட்சத்தையும் பெரியதொரு மனித அவலத்தையும் பறைசாற்றுகிறது.

ஏறாவூரில் கூடுதலான விலை கொடுத்தும் ஒரு துண்டு நிலம் வாங்க முடியாத சூழ்நிலை உள்ளது.

இப்பகுதியிலுள்ள நீர் வடிந்தோடக்கூடிய வடிகான்கள் தற்பொழுது குடியிருப்புகளாக மாற்றப்பட்டு வருவதனால் மழைக் காலங்களில் நீர் வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்கிறது.

இதனால் சுகாதார சீர்கேடுகளையும் வருடாவருட வெள்ள அபாயத்தையும் மக்கள் எதிர்நோக்கி வருகிறார்கள்.

மாடு அறுக்கும் தொழுவம்கூட மக்கள் வாழும் குடியிருப்புக்களுக்கு மிக அருகிலேயே அமைந்துள்ளதாலும் மக்கள் மிகவும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

வியாபாரஸ்தலங்களும் முழுமையாக இடித்தழிக்க வேண்டிய நிலையுள்ளது.

பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்றொழுங்கு செய்து வீடுகளையும் வியாபார ஸ்தலங்களையும் நிர்மாணித்துக் கொள்ள வசதியாக ஏறாவூரில் அரச காணிகளோ தனியார் காணிகளோ இல்லை.

இதனால் பலருக்கு எதிர்காலத்தில் இங்கு எப்படி வாழப்போகிறோம் என்பது குறித்த அச்சம் ஏற்பட்டுள்ளது.

அகில இலங்கை ரீதியில் பல போட்டி நிகழ்ச்சிகளில் சாதனைகளைப் படைத்த விளையாட்டு வீரர்கள் ஏறாவூர்ப் பிரதேசத்தில் இருக்கின்ற போதிலும் அவர்கள் தங்களது திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் சிறந்த விளையாட்டு மைதானம் ஏறாவூரில் இல்லை.

திறமையான வீரர்களின் பயிற்சிக்காக சகல வசதிகளையும் உள்ளடக்கிய விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு காணிகள் இல்லாதது விளையாட்டு வீரர்களின் எதிர்காலத்தை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.

ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவில் ஒரு துண்டு நிலம் கூட இல்லாத காரணத்தினால் எந்த வகையான தொழில் நிலையங்களையோ, தொழிற்சாலைகளையோ, தொழிற்பயிற்சிக் கூடங்களையோ அமைக்க முடியவில்லை.

ஆகவே ஏறாவூர் நகர பிரதேச செயலகம் தொடர்பில் 1998ஆம் ஆண்டு வெளியான வர்த்தமானி அறிவித்தலை மறுசீரமைத்து புதிய எல்லைகளை வரையறை

இந்த முன்மொழிவு செயலுருப்பெறுகின்றபோது புதிய ஏறாவூர் நகர பிரதேச செயலகப் பிரிவின் நிலப்பரப்பு 19.45 சதுர கிலோ மீற்றராக அமையும்.

இவ்வாறு நிலப்பிரச்சினைக்கு தீர்க்கமான ஒரு முடிவு கிட்டுமாயின் ஏறாவூர் நகர பிரதேச முஸ்லிம்கள் எதிர்கொண்டு வருகின்ற பெரும்பாலான பிரச்சினைகள் சுலபமாகத் தீர்ந்து விடும் என்று ஏறாவூர் பிரதேச மக்களின் சார்பில் ஏறாவூர் பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் கடைசியாக 2021ஆம் ஆண்டிலும் சமர்ப்பித்துள்ள முன்மொழிவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

(மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்கள் எதிர்நோக்கும் காணி நிருவாகப் பாரபட்சம் தொடர்.. வரும் வாரமும் வரும்)




## நானா நீயா அவனா?



சபீர் மொஹமட்

# ஊடக தர்மம்!

இன்றளவில் இலங்கையில் அநேகமான ஊடகங்கள் நீதிமன்றங்களாக மாறி வருகின்றன. நிகழ்வுகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு பதிலாக பொலிசார் என்ன கூறுகிறார்களோ அதை அவ்வாறே எழுதி அதுதான் உண்மை என்றவாறு உலகம் அறிய வெளியிடுவார்கள். அதற்கு "நவீன ஊடகம்" என்ற ஒரு பெயர் வேறு !

2023 டிசம்பர் 13ம் திகதி கஹவத்தை – வெல்லதுர பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் 71 வயதான தாய் ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து கஹவத்தை பொலிஸார் குறித்த பெண்ணின் மகளை சந்தேகத்தின் பெயரில் கைது செய்கின்றார்கள். இந்த சம்பவம் சமூக வலைத்தளங்களில் மிகப்பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்துகின்றது. இவ்வாறு சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட மகளை எமது நாட்டின் பிரதான ஊடகங்கள் முதல் சமூக ஊடகங்கள் வரை அத்தனையும் ஒன்று சேர்ந்து "தாயையே கொலை செய்த படுபாவி நீ" என மகள் மீது முத்திரை குத்தினார்கள்.

எமது நாட்டின் "சகலதுக்கும் மேலால்" என கூறிக் கொள்ளும் ஒரு ஊடகம் சகலதையும் கண்ணால் கண்டது போல் ஒரு அறிக்கையிடலை வெளியிடுகின்றார்கள். இதுவரை கிட்டத்தட்ட 13 லட்சம் பேர் அந்த வீடியோ அறிக்கையினை முகநூ லில் பார்த்துள்ளார்கள். அதில் அநேகமானவர்கள் 'கமெண்ட்' பகுதியில், அத்த கொளைகார மகளை கொல்ல வேண்டும், விட்டு வைக்கக் கூடாது என மென் மேலும் வன்முறையையும் தூண்டுகின்றார்கள்.

மிகவும் சிறுபிள்ளைத்தனமான இந்த அறிக்கையிடலில் பொலீசார் புலனாய்வு செய்து கண்டுபிடித்ததாக கீழே உள்ள விடயங்களை கூறியுள்ளார்கள். – இறந்து கிடந்த தாய்க்கு அருகே மகளின் ஒரு கைக்குவசம், – காவல் நாய் மூன்று முறை மகளின் அறைக்கு சென்றுள்ளது, – சம்பவத்த தினத்தில் மகள் 03 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள தாம் சேவை செய்யும் இடத்திற்கு ஆறு நிமிடத்தில் சென்றுள்ளார். திரும்பி வரும்போது 17 நிமிடங்களை விட அதிகமான நேரத்தை செலவு செய்துள்ளார். சிசிடிவி கேமராக்களின் உதவியுடன் போலீசார் கண்டுபிடிப்பு. அதனோடு நின்றுவிடாமல் குறித்த மகள் திருமணம் ஆகாத ஒரு பட்டதாரி!

கிட்டத்தட்ட ஒன்றரை நிமிட இந்த காணொளி, பார்ப்பவர்களின் மனதில் மகள்தான் கொலையாளி என்பதை பதியவைக்கின்றது. ஆனால் கடந்த டிசம்பர் 30ஆம் திகதி பல்மடுல்ல நீதிமன்றம் குறித்த பெண்ணை நிரபராதி எனக்கூறி விடுதலை செய்கின்றது. உண்மையான குற்றவாளியை போலீசார் பின்னர் கைது செய்கின்றார்கள். ஆனால் எந்த ஒரு ஊடகமும் அதனை பெரிதாக அலட்டிக் கொள்ளவே இல்லை. இங்கே குறிப்பிடத்தக்க விடயம் யாதெனில் இறந்த குறித்த தாயின் மகன் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளர். மிகவும் மனவேதனையுடன் தனது குடும்பத்திற்கு நிகழ்ந்த அநீதிகள் குறித்து முகநூலில் அவர் எழுதி இறுதியில் "என் ஊடக நண்பர்களே நீங்கள் எனக்கே இவ்வாறு செய்கிறீர்களாயின் இந்த நாட்டிலே வாழ்கின்ற அப்பாவி மக்களுடைய வாழ்க்கையுடன் எவ்வாறெல்லாம் விளையாடுவீர்கள்? " என்ற கேள்வியை கேட்கின்றார்.

எந்த ஒரு நிரபராதியும் தண்டிக்கப்படக் கூடாது என்பதற்காகவே இலங்கை அரசியலமைப்பில் அடிப்படை உரிமை என ஒரு விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது. அதிலே பிரிவு 13 மிகவும் தெளிவாக "தன்னிச்சையாக சிறைவைத்தல், தடுத்து வைத்தல் மற்றும் தண்டனை வழங்குதல் ஊடாக ஒரு தனிநபரின் சுதந்திரத்தை பறிக்க முடியாது" என்பதை வலியுறுத்துகின்றது.

அதுமட்டுமல்லாமல் ஏதேனும் ஒரு சம்பவத்தின் விசாரணை குறித்து பொலிசாருக்கு முதற்கட்டத் தகவல்கள் கிடைத்த பிறகு அங்கிருந்து விசாரணை செயல்முறைகளை மேற்கொள்ள வேண்டிய விதம் பற்றி குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் ஐந்தாவது (5) பிரிவின், அத்தியாயம் பதினொன்று (XI) மிகவும் தெளிவாக கூறுகின்றது. அங்கே எந்த ஒரு இடத்திலும் புலனாய்வு செய்கின்ற அதிகாரிகள் விசாரணையின் தகவல்களை ஊடகங்களுக்கு உப்பு புளி சேர்த்து சொல்ல வேண்டும் என எங்குமே குறிப்பிடவில்லை.

சிசிடிவி மற்றும் மோப்ப நாய் ஊடாக பொலிசார் ஒரு நிரபராதியான பெண்ணின் மீது முதலில் சந்தேகத்தை உருவாக்குகின்றார்கள். பின்னர் அது அத்தனையையும் ஊடகங்களுக்கு வழங்குகின்றார்கள். ஊடகங்கள் அதனை அவ்வாறே அறிக்கையிட்டு இவள் தான் இந்த கொலையை செய்துள்ளார் என மக்களை நம்ப வைக்கின்றது.

இலங்கையில் 08.03.2011 ஆம் திகதி வழங்கப்பட்ட CA 306/2006 என்ற ஒரு நீதிமன்ற தீர்ப்பு உள்ளது. அதாவது Dog Tracking evidence எனப்படுகின்ற "மோப்ப நாயின் சாட்சியத்தை" மட்டுமே அடிப்படையாகக் கொண்டு குற்றம் சாட்டப்பட்ட ஒருவரின் அடையாளத்தை உறுதி செய்வது பாதுகாப்பற்றது, என அதிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இது எதுவும் தேவையில்லை. நம் நாட்டு ஊடகங்கள் வழக்குகளை மிக விரைவாக கேட்டு முடிவெடுக்கின்றன. பல சந்தேக நபர்கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டாலும், அவர்கள் வாழ்நாள் முழுவதும் இதுபோன்ற கீழ்தரமான ஊடக அறிக்கையிடல்களினால் தண்டிக்கப்படுகிறார்கள். நம் அனைவருக்கும் தெரியும், இவ்வாறு நடக்கின்ற முதலாவது முறையும் இதுவல்ல இறுதியும் இதுவல்ல என்று !

இந்த சம்பவத்தை பார்க்கும்போது 2015ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் புங்குடுதீவு வித்யாவின் படுகொலை ஞாபகத்திற்கு வருகின்றது. அன்றும் சமூக வலைத்தளங்களில் இறந்து கிடந்த வித்யாவின் புகைப்படங்களை ஒரு சிலர் பதிவேற்றி அதிலிருந்து பிரபல்யம் தேடினார்கள். அதுமட்டுமின்றி வித்யாவின் கொலை வழக்கு சர்வதேசரீதியில் முக்கியத்துவம் பெற்றிருந்தது. ஒரு கட்டிலமைப் பருவ பெண் ஆபாசப்படம் தயாரிக்கும் சர்வதேச மார்பியா கும்பலொன்றின் வழி நடத்தலின் பிரகாரம் கொலை செய்துள்ளமை விசாரணைகளின் போது தெரிய வந்ததன் காரணமாக இது பற்றி அறியும் பொது மக்களின் ஆர்வம் மேலோங்கி காணப்பட்டது.

இதனால் ஊடகங்கள் இதனை அறிக்கையிடுவதில் அதீத ஆர்வம் காட்டினார்கள். மேலும் குற்றவாளிகளை தப்ப வைப்பதற்காக விஜயகலா மகேஸ்வரி போன்ற அரசியல்வாதிகளின் தலையீடும் பொதுமக்களின் ஆர்ப்பாட்டங்களும் கடையடைப்பு போராட்டங்களும் இந்த சம்பவம் குறித்த ஆர்வத்தை மென்மேலும் தூண்டியது. ஓவ்வொரு நாளும் நடைபெறும் விசாரணைகள் ஊடகங்களில் அப்படியே அச்சொட்டாக வெளிவந்தன. குறிப்பாக பதில் சட்டமா அதிபர் வழக்கின் ஆரம்ப உரையை நிகழ்த்திய போது தெரிவித்த விடயங்கள் அத்தனையும் எந்த ஒரு தணிக்கையும் செய்யப்படாமல் அவ்வாறே ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டன. யாழ்குடா நாட்டில் வெளிவருகின்ற ஒரு பத்திரிகை, 29.06.2017 ஆம் திகதி இங்கே எழுதக்கூட முடியாத விதத்தில் நான்காம் பக்கத்தில், வித்யாவின் உடலை உடற்கூற்று சோதனைக்கு உட்படுத்திய வைத்தியர் கூறிய கருத்தை அவ்வாரே தமது பத்திரிகையில் எழுதியிருந்தார்கள்.

அன்று ஒருமுறை மாத்திரம் உயிரிழந்த வித்யாவை ஊடகங்கள் மீண்டும் மீண்டும் அறிக்கையிடல் என்ற போர்வையில் கொலை செய்தார்கள். இந்த அறிக்கையிடல் தொடர்பில் அப்போது சமூக ஆர்வலர்கள், அரச உத்தியோகஸ்தர்கள் எனப்பலரும் தமது அதிர்ப்தியை வெளியிட்டு இருந்தார்கள்.

இந்த இரண்டு சம்பவங்களும் இரு வெவ்வேறு சம்பவங்களாக இருந்தாலும் குப்பை போல் நாற்றத்தை தேடுகின்ற வாசகர்கள் யார்? குப்பையை படம் போட்டு காட்டுகின்ற ஊடகங்கள் எது? அந்த ஊடகங்களின் பின்னால் இருப்பவர்கள் யார்? ஒரே இடத்தில் மூழ்கிக் கொண்டுள்ள ஒரு பழுதடைந்த கப்பலின் இரு வேறு துருவங்கள் நாங்கள் !

சிந்தியுங்கள். மாறவேண்டியது நீங்களா? ஊடகங்களா? என்று.





நாச்சியாதீவு பர்வீன்

இலக்கியம் என்பது அலாதியான அனுபவம் ஆகும். தான் வாழ்ந்த காலத்தின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும், அடையாளத்தையும், அடுத்த பரம்பரைக்கு காவிச்செல்லுகின்ற பிரதான ஊடகமாக இலக்கியம் செயற்படுகிறது. இதனால்தான் இலக்கியத்தை காலத்தின் கண்ணாடி என்பர். நாம் கண்டதையும் கேட்டதையும், அனுபவித்ததையும் எழுத்தில் கொண்டுவரும் போது அதுவே சிறந்த ஆவணமாக மாறுகின்றது. இந்த அருவிக்கரை வாசகர்களுக்காகவும், எழுத வேண்டும் என்ற ஆர்வத்தோடு இருக்கின்ற ஆர்வமும் ஆற்றலும் உள்ளவர்களுக்கான களமாகும். நிறைய வாசியுங்கள் கொஞ்சமாய் எழுதுங்கள் மனதில் பட்டதை எழுதுங்கள் அதன் வடிவத்தை வாசகர்கள் தீர்மானிப்பார்கள். ஒரு நல்ல இலக்கியப் படைப்பு எப்போதும் ஆராதிக்கப்படுவதோடு சமூகப்பெறுமானத்தையும் அப்படைப்பு கொண்டிருக்கும். அந்தவகையில் அருவிக்கரையில் இணைந்து பயணிக்க இளையவர்களே வாருங்கள்! உங்கள் சிந்தனை அருவிக்கரையை வெளிச்சமாக்கட்டும்.

– பொறுப்பாசிரியர்–

# வெய்யில் மனிதர்கள் நூல் குறித்தான பார்வை

ஒரு நல்ல நூல் அதன் முதல் வரியினதும் இறுதி வரியினதும் உயிரோட்டத்திலும் உத்வேகத்திலும் வருடலிலும் தான் உயிர்வாழும்...

அந்த வகையில் கஸ்ஸான் கனபானியின் கலைநுட்பம் கதைசொல்லும் பாணி வாசகர்களை கட்டிப்போட்டுவிடும்.

வேறெல்லா புலச்சிதறல்களையும் விட்டு கதைக்குள் குவியப்படுத்திவிடும்.

கவலைகளை கரைபுரண்டோட வைக்கும்.

காலப்பொருத்தம் மிக்க ஒரு நூலாக இதனை வாசகர்களுக்கு பரிந்துரைக்கலாம்.

மத்திய கிழக்கின் சமகால நிலை கொதிப்பும் குமுறலும் கொந்தளிப்பும் நிறைந்ததாக உள்ளது. பாலஸ்தீனத்தை கலைவழியாக புரிய அழகான தருணம் இது. இதயத்தை அப்படியே உருகி ஓட வைக்கும் தன்மை நூலின் கனதியை வலிதாக்கிவிடுகிறது. வலிகளுக்கும் வலிமை சேர்க்கிறது

ஏனைய நாவல்கள் போலவே இங்கும் மனித இயல்புகள் பட்டுத்தெறிக்கின்றன. மகாத்மா காந்தி சொல்வது போல ”பசியோடிருப்பவன் ரொட்டித்துண்டில் கடவுளைக்காண்பான்” என்பது எவ்வளவு தத்ரூபமாக இங்கு காட்சியாக்கப் படுகிறது.

ஆசைகள் திருமணம் இழப்பு நோய் வருத்தம் கடன்சுமை எதிர்காலம் என எல்லாமே சுழல்கிறது.

ஆனாலும் அந்த துன்பியல் சக்கர சுழற்சி மட்டும் எல்லா பக்கமும் புடைசூழ்ந்து வருகிறது.

அபூகைஸ் கைஸூரான் தவிர உள்ள எல்லோருமே யதார்த்தத்தின் அடையாளங்கள் குறியீடுகள் தான்


பாலஸ்தீன மக்களின் முக்கால பரிணாமம் தான் பிரதான கதாபாத்திரங்கள். அவை காலத்தின் நீட்சிக்கான சான்றுகள். முடிவோ முற்றுப்புள்ளியோ இன்றி தொடரும் அவலங்கள்

எத்தனை தலைமுறையாக இந்த அவலத்தை சுமந்து திரிவது... அந்த மக்கள் சட்டத்தில் எத்தனை ஓட்டைகள். அந்த ஓகஸ்ட் மாத கர்ண கொடூர வெயில் போலத்தான் பாலஸ்தீனத்துக் கெதிரானவர்களது மனங்களும். சுட்டுப்பொசுக்கி சாகடிக்கவே காத்திருக்கும். இதுவே இது நூலில் கதைக்கான கருவாக இருப்பினும் அங்கு காலங்காலமாக கண் முன்னே இப்படியான கவலைக்கிடமான மரணங்களைத்தானே விலை கொடுத்து வாங்கி வாழ்கின்றார்கள்.

சுதந்திரத்தின் பெறுமதியை உணர்த்த மரணத்தை உதாரணமாக காட்டியாக வேண்டியுள்ளது.

நிம்மதியின் பொருளுணர்த்த அவலத்தை அலைச்சலை காட்டியாக வேண்டியுள்ளது.

இருப்பின் பொருளுணர்த்த இல்லாமையே நோக்கி



கனரக வாகனம் என்பதே கதிரியக்க அறையின் உஷ்ணத்தை எதிரொலிக்க வைக்கிற நிலையில் எப்படி அந்த மூவரும் தம் வாழ்வை அதற்குள்ளே ரணமாகவும் மரணமாகவும் நிலைமாற்றிவிடுகிறார்கள். அதற்காக எத்தனை பகீரதப் பிரயத்தனங்கள். அதற்கான ஏற்பாடுகள். கடத்தல் பேர்வழிகள் கூட புலம்பெயர்வை எவ்வளவு சமயோசிதமாக லாபகரமான வியாபாரமாக்கியுள்ளனர்.

பயணித்தாக வேண்டியதை சொல்ல வேண்டி ஏற்படுகிறது

இன்னுமின்னும் சொல்லிக்கொள்ள முடியாத சோகம் படர்கிறது... நாவலை மெல்ல மெல்ல முடிக்க நகர்கையில்

நாடி நாளமெல்லாம் புல்லரிப்பு ஏற்பட்டு விடும். மொழிபெயர்ப்பின் சொற்களுக்குள் அகப்படாத சோகம் ஊடுருவும். அது உணர்வை நிச்சயம் கசக்கிப்போடும். ஆக்கிரமிப்புக்கும் ஆயுதத்துக்கும் அழிவுண்டாக்க சாபத்தை கொட்ட கக்க தூண்டும்.

வார்த்தைகளுக்குள் அகப்படாத ஒரு வலி உங்களையும் ஆட்கொள்ளும். பாலஸ்தீன விடுதலை குறித்த தெளிவை புரிதலை தரும்.

மனிதாபிமான உணர்வை சர்வதேச எல்லை வரை பீறிட்டு பிரவாகித்து அநீதிக்கெதிராக குரல்கொடுத்து உண்மையை உரத்துச்சொல்ல தூண்டும். புலம்பெயர்தல் என்பதன் பின்னால் உள்ள சுமக்க முடியாத கனதியான சுமை குறித்து குறிப்பாலுணர்த்தும்.

அத்தனைக்குள்ளும் நாவலுக்கு நயம்தருவதாக

மொழியும் அரசியலும் மானுட உணர்வும் மனிதாபிமானமும்

சர்வதேச நாடுகளுக்கிடையிலான

கொள்கை கோட்பாடுகள்

எல்லைத்தகராறுகள் என ஏராளமான

பூடகங்களை

கட்டுடைத்து

கடந்து விடுகிறது

இறைவனது நில எல்லை விசாலமாக

இல்லையா

அதனை நோக்கி நீங்கள் நகரக்கூடாதா

என்பதற்கப்பாலும்

நீங்கள் என் வாய்திறக்காத மௌனிகளாக

உள்ளீர்கள்

ஒரே ஒரு வார்த்தை பேசி இருந்தால்

வாழந்திருக்கலாமல்லவா.... என்று கூறுவதாக உள்ளது.

எட்வட் செய்த் சொல்வது போல

Speaking truth to the power

அதிகாரத்தின் முன் உண்மையை உரத்து பேசுவதன்

ஆக குறைந்த தரமாக

அவசியத்தின் போது வாய்களையாவது

கொஞ்சம் திறந்தால்

உயிரையாவது

காத்துக்கொள்ளலாம்

அந்த மூவரும்

அந்த எல்லைக்கு அப்பால் கூட போயிருக்கலாம்.... வாயை திறந்திருந்தால்

ஆனால் நாமோ அந்த கவ்கப் மீது பழியை போட்டு அமைதிகாக்கிறோம்

தட்டி ஒலியெழுப்புங்கள்

அவர்களது கல்புகள் இனியாவது திறந்துகொள்வதற்காக.

**பிஸ்தாமி அஹமட்**
**- மல்வானை.**

# காவிகளும் ஒட்டுண்ணிகளும்

சேர்ந்தே வருகின்ற
துன்பத் துகள்கள்
வெடிக்கும்
ஒருநாளில்
அதை இன்றையதாக்க
”ஆட்” பேப்பரில்
செந்நிற தூரிகையால்
கத்தி அரிவாள்களை
ஆடம்பரமாய்ப் போட்டோம்
ஹொட்டல்
இன்டர்கொன்டினனன்டில்
”ஹொட் ரிங்சுடன்”
மார்க்ஸ் ஏங்கல்ஸ் பற்றி
பெரிய டிஸ்கஷன்ஸ் செய்தோம்
”ஒபின்” எயர் தியேட்டரில்
”ஒபரேசன்” பற்றி
லெக்சர் வைத்தோம்
சே......
இந்த தொழிலாளர் விவசாயிகள்
சுத்த மோசம்
மார்க்சிஸம்
காலாவாதியாகிவிட்டது
”ஈகோ” விழித்துக்கொண்டு
அனுபவ மென்சூடு
மெய்முதல் வாதம்
சமுதாய ஆன்மீக பார்வை
இவைகளையும்
ஒரு கை பார்த்தாலென்ன?

-அன்பு ஜவஹர்ஷா -

# ஓகொடபொல ”ஜீனியஸ் கிட்ஸ்” கல்வி நிலையத்தின் வருட இறுதி சான்றிதழ் வழங்கும் விழா









(ஐ. ஏ. காதிர் கான்)

வெயாங்கொடை – ஓகொடபொல ”ஜீனியஸ் கிட்ஸ்” ஆங்கில சிறார் கல்வி நிலையத்தின் 12 ஆவது வருடாந்த சான்றிதழ் மற்றும் பரிசளிப்பு வழங்கும் விழா நிகழ்வு, அண்மையில் (23) கஹட்டோவிட்ட முஸ்லிம் லேடிஸ் ஸ்டடி சேர்கல் கேட்போர் கூடத்தில், நிலையத்தின் ஸ்தாபகரும் பொறுப்பாளருமான றிஸ்னா ஹனீபா தலைமையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது. இதன்போது, சிறார்களின் ஆங்கில அறிவுத் திறன்களை வெளிப்படுத்தும் பேச்சுப் போட்டிகள் மற்றும் சிறார்களின் ஆங்கிலப் பாடல்களுடனான கலை கலாசார நடன நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டன.

இச்சிறப்பு நிகழ்வில், ஆங்கிலப் பேச்சு மற்றும் நடன பரிசோதகரும் ஆசிரியையுமான சிஹாரா டயஸ் பண்டாரநாயக்க பிரதம அதிதியாகவும், கஹட்டோவிட்ட முஸ்லிம் பாலிகா மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவின் பகுதித் தலைவியும் ஆசிரியையுமான எம்.எம். கே. மௌபியா கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்ததோடு, ஆங்கில எழுத்து மற்றும் வாய்மொழி மூலமான போட்டிகளில் தமது திறமைகளை வெளிப்படுத்திய சிறார்களுக்கு சான்றிதழ்கள், பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்களையும் வழங்கி கௌரவித்தனர்.

அத்துடன், இந்நிகழ்வில் பங்கேற்றி சிறப்பித்து வைத்தமைக்காக, பிரதம அதிதி சிஹாரா, கௌரவ விருந்தினர் மௌபியா ஆகியோருக்கு, ஆங்கிலக் கல்வி நிலைய ஸ்தாபகர் றிஸ்னா, நினைவுச் சின்னங்களை வழங்கி பாராட்டி கௌரவித்தமையை விசேடமாகக் குறிப்பிட முடியும்.

இக்கல்வி நிலையத்தில், சிறார்களுக்கு ஆரம்பக் கல்வி முதல் தரம் ஆறு வரையிலான ஆங்கிலக் கல்விப் போதனைகள், மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டு வருவதாகவும், இதேவேளை இச்சிறார்களுக்கு ஆங்கில எழுத்து மற்றும் வாய்மொழி மூலமான பயிற்சிகள், மிக அவதானத்துடன் துள்ளியமாக வழங்கப்பட்டு, அவர்கள் கம்பஹா மற்றும் கொழும்பு பிரதேசங்களில் இடம்பெறும் ஆங்கில மொழி மூலமான பரீட்சைகளுக்குத் தயார்படுத்தப்படுவதாகவும், குறிப்பாக இந்நிகழ்வை சிறப்பாக நடாத்த பாரிய பங்களிப்புக்களையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய பெற்றோர்களுக்கும் நலன் விரும்பிகளுக்கும் தனது இதயம் கனிந்த நன்றிகளையும் பாராட்டுதல்களையும் நல்குவதாகவும், இக்கல்வி நிலையத்தின் ஸ்தாபகரும் பொறுப்பாளருமான றிஸ்னா ஹனீபா தெரிவித்தார்.

# வெலிப்பன்னை ஸ்டார் பாலர் பாடசாலை சர்வமத நிகழ்வு







(பேருவளை பீ.எம். முக்தார்)

வெலிப்பென்னை முஸ்லிம் வீதியிலுள்ள ஸ்டார் பாலர் பாடசாலை முற்ற வெளியில் இன் உறவை கட்டியெழுப்பும் நோக்குடன் சர்வமத நிகழ்வொன்று பாடசாலை சிறார்களின் பங்கு பற்றலுடன் இடம் பெற்றது.

மேல் மாகாண ஆரம்ப பாடசாலை அபிவிருத்தி அதிகாரி மாதவி குணரத்ன, வெலிப்பென்னை ரஹ்பானிய்யா முஸ்லிம் மஹா வித்தியாலய அதிபர் முஹம்மத் நௌமான் மத்துகம பிரதேச சபை முன்னால் உறுப்பினர் ஏ.எச்.எம் ரம்ஸ ான் உட்பட பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்

சிறார்களின் பெற்றோர்கள் ஆசிரியர்கள் ஊர் பிரமுகர்கள் பலரும் இந் நிகழ்வில் பங்கு பற்றினர்.

## மனநலமும் ஆலோசனையும் 13

# கணவனை மதித்தல்

கணவனை மதித்தல் என்பது அவர் மீது நம்பிக்கை வைப்பது மட்டுமல்ல, அவருடன் அன்பைக் கொண்டிருப்பது, அவர் மீது உயர்வான சிந்தனையை கொண்டிருப்பது அவர் புரிந்துகொள்ளப்படுவதை அவருக்கு உணரவைப்பது போன்ற விடயங்களால் உருவான ஒரு கலவையாகும்.

கணவனை மதிக்க வேண்டியது நம் கடமை. இதிலுள்ள மற்றொரு முக்கிய அம்சம் என்னவென்றால், கணவன் தன் மனைவிக்கு அன்பு காட்டும்போது, அதற்கு பதிலாக அவன் அவளிடம் இருந்து அதிக அன்பையும் மதிப்பு மற்றும் மரியாதையையும் பெறுகிறான்.

ஆனால் ஒரு மனிதனுக்கு கிடைக்கும் மதிப்பு அன்பை விட முக்கியமானது. மனதை இலகுவாக ஈர்க்கக் கூடியது. மனைவியிடம் இருந்து கணவனுக்கு கிடைக்கும் மதிப்பு சாதாரணமானதல்ல. அவன் ஆக்கம் பெறவும் ஊக்கம் அடையவும் பயனும் பெருமதியும் உள்ளவனாக தன்னை ஆக்கிக் கொள்ளவும் துணையாக இருக்கும்.

– நீங்கள் பல வழிகளில் உங்கள் கணவருக்கு மதிப்பு செலுத்தும் நல்ல மனைவியாக இருக்கலாம். நீங்கள் தரும் மதிப்பு கணவனின் பல வெற்றிகளுக்கு முக்கிய பங்காகவும் இருக்கலாம்.

நினைவூட்டலுக்காக கணவனை மதிப்பது தொடர்பாக இங்கு சில உதாரணங்களை முன்வைக்கிறோம்.

– அவர் உங்களுக்கு செய்யும் எல்லா நன்மைகளுக்கும் உங்கள் நன்றி தெரிவிக்கலாம்.

– அன்பான வார்த்தைகளாலும் அழகான செயல்களாலும் உங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தலாம்.

– நீங்கள் சத்தமாக பேசுவது உங்கள் கணவனுக்கு பெரும்பாலும் பிடிக்காமல் இருக்கும். எனவே அவரிடம் மென்மையாகவும் மிதமான குரலிலும் பேசலாம்.

– சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் அவருடன் நேரத்தை செலவிடலாம்.

– ஆண்கள் பொதுவாகவே விடயங்களைச் சரிசெய்து பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புகிறார்கள். உங்கள் கணவருடைய ஆலோசனைகளை, அவருடைய முன்னோக்கு சிந்தனைகளை மதிப்பதை உணரவிடலாம்.

– அவரைப் பற்றி நீங்கள் விரும்புகின்ற அவ்வாறே பாராட்டக்கூடிய மற்றும் போற்றும் விடயங்களை அவரிடம் சொல்லலாம்.

– உறவினர்கள் மற்றும் விருந்தினர்கள் முன் அவருடன் கௌரவமாக நடந்து கொள்ளலாம்.

– உங்கள் கணவர் வீட்டிற்கு வரும்போது, அவரை புன்னகையுடனும் மகிழ்ச்சியுடனும் அன்பான வாழ்த்துக்களைக் கூறியும் வரவேற்கலாம் .

– சோர்வு, பசி, தாகம் போன்ற அவரது உடல் தேவைகளில் கவனம் செலுத்திய பிறகு அவருடைய விடயங்கள் பற்றி கேட்கலாம்.

– அவர் பேச விரும்பாத போது அமைதியாக இருக்கலாம்.

– அவர் ஆசையுடன் பேசும் போது ஒரு நல்ல கேட்பவராக இருக்கலாம்.

– சிக்கல்களைச் சமாளிக்க ஊக்கமளிக்கும் வார்த்தைகளால் அவரை பலப்படுத்தலாம்.

– அவர் அர்ப்பணிப்புகளை, உழைப்பை பாராட்டிப் பேசலாம்.

– சிக்கனமான வாழ்க்கையை வாழ்ந்து காட்டலாம்

– அவருடைய உறவினர்களுடன் அழகாக நடந்து கொள்ளலாம்.

– இவை போன்ற சிறிய செயல்கள், கணவனின் சோர்வுற்ற மனதைப் புத்துணர்ச்சியடையச் செய்யும் மேலான சக்தியை கொண்டுள்ளன.

மணவாழ்வில் எல்லா ஜோடிகளுக்கும் இடையே அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் ஏற்படத்தான் செய்யும். அது நீண்ட நேரம் நீடித்து மோதலில் முடிவடைய இடம் தராமல் இருப்பது மதிப்பின், மரியாதையின் குணமாகும்.

கணவன் மனைவி இருவருக்கும் மென்மையான வெளிப்பாடுகள் தேவைப் படுகின்றன. மென்மையான வழிகளில் உங்கள் கணவரிடம் உங்கள் அன்பை வெளிப்படுத்துவது மதிப்பின் அடையாளமாகும்.

ஒரு கடுமையான வார்த்தை அல்லது இரக்கமற்ற தொனியை பயன்படுத்த வேண்டிவந்தால், அந்த நேரத்தில் உங்கள் வாயை மூடிக்கொள்வது நல்லது. மௌனமே மரியாதைக்குரிய தேர்வாகும்.

– அவருடைய ஆரோக்கியத் திற்காகவும் நல்வாழ்வுக்காகவும் நீங்கள் பிரார்த்தனை செய்கிறீர்கள் என்பதை அவருக்கு உணர்த்தலாம்.

– உங்கள் கணவரை எப்படி மகிழ்விப்பது என்று இறைவனிடம் யோசனை கேட்கலாம்.

ஒருவருக் கொருவர் தீவிரமாக நேசிக்கவும் மதிக்கவும் இங்கு குறிப்பிட கருத்துக்கள் உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.

மனைவி கணவனுக்கு கொடுக்கும் மதிப்பும் கணவன்–மனைவியின் அன்பும்....

காயங்களுக்கு மருந்தாகவும்,

சோகங்களுக்கு சுகமாகவும்,

சங்கடங்களுக்கு வழிகாட்டியாகவும்,

நல்ல செயல்களுக்கு ஆசிரியராகவும்,

மகிழ்ச்சிக்கு துணையாகவும் இருக்க வேண்டும்.

அப்படியே இருக்க பிரார்த்தனை செய்கிறோம்....!



**அஸ்ஹர் அன்ஸார்** FRSPH (UK)
**மனோதத்துவ ஆலோசனை நிபுணர்**
**மனோதத்துவ எழுத்தாளர்**

# தேர்தலை இலக்காகக் கொண்டு இனவாதத்தை தூண்ட இடமளிக்கக்கூடாது

## – விஜயதாச ராஜபக்ஷ காட்டம் –

(ஐ. ஏ. காதிர் கான்)



உதயமாகியுள்ள புதிய வருடத்தில் தேர்தலை இலக்காகக் கொண்டு, இனவாதத்தைத் தூண்டுவதற்கு முயற்சிக்கும் சுயநல அரசியல்வாதிகளுக்கு இடமளிக்கக் கூடாது என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நீதி அமைச்சு வளாகத்தில் (01) திங்கட்கிழமை காலை இடம்பெற்ற கடமை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் நிகழ்வில் கலந்துக்கொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், இலங்கையின் ஜன நாயக சமூகத்தில் தேசிய ஒருமைப்பாட்டினையும், சட்டத்தின் ஆட்சியையும் ஏற்படுத்தி நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

அத்துடன், உலகில் பொருளாதார வீழ்ச்சியடைந்த நாடுகளில் இவ்வளவு குறுகிய காலத்தில் ஸ்திர நிலையை அடைந்த நாடு இலங்கை மட்டுமே ஆகும். வீழ்ச்சியடைந்துள்ள எமது நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம்.

தொடர்ந்து, அரசியலமைப்பில் ஊழல் எதிர்ப்பு போன்ற, மக்கள் எதிர்பார்த்த மாற்றங்களையும் மேற்கொள்ளவுள்ளோம்.

மேலும், இந்த வருடம் தேர்தல் வருடம் ஆகும். இத்தேர்தலை நோக்காகக் கொண்டு இன, மத வேறுபாடுகளை உருவாக்க முயற்சிக்கும் சுயநல அரசியல்வாதிகளை மக்கள் புறக்கணிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

# தேசிய கண் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

(ஐ. ஏ. காதிர் கான்)

புத்தாண்டு (2024) பரிசாக, வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் குழுவொன்றினால், கொழும்பு தேசிய கண் வைத்தியசாலைக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட மருத்துவ உபகரணங்கள் உள்ளிட்ட பொருட்கள், (02) செவ்வாய்க்கிழமை கையளிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, சுமார் 70 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களும், 30 மில்லியன் ரூபா பெறுமதியான 5,000 கண் வில்லைகளும் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக, தேசிய கண் வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# கல்மெடியாவ குளத்தின் கசிவு; சீராக்கிய கடற்படையினர்

(ஏ.எச்.ஹஸ்பர்)



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பகுதியில் உள்ள கல்மெடியாவ குளத்தின் நீரேந்து பகுதியில் கசிவு ஏற்பட்டதையடுத்து கடற்படையினரின் உதவியால் சரிசெய்யப்பட்டது.

புதனன்று (03) இடம் பெற்ற இச் சம்பவமானது, நாட்டில் நிலவும் அசாதாரண சூழ் நிலை காரணமாக பல குளங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டு ஆறுகளின் கிளைகளும் திறக்கப்பட்டதால் இக் குளத்தின் நீர் மட்டமும் அதிகரித்ததன் விளைவாக ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கல்மெடியாவ குளத்தின் சுமார் 200மீற்றர் தூரம் கொண்ட துருசி நீரினுள் கடற்படையினர் தங்களது உயிர்களை துச்சமென மதித்து நீர் கசிவு தொடர்பில் ஆராய்ந்துள்ளனர்.குளத்தின் நீரேந்து பகுதி பூட்டப்பட்டு நீர் கசிவு தொடர்பில் நீருக்கடியில் அதன் பாதக விளைவுகள் தொடர்பில் தொழில் நுட்ப ரீதியான விளைவுகளை கண்டு கொண்டனர் அதன் பின் சுமூகமாக குளத்தின் நீர் மட்டம் திறக்கப்பட்ட நிலையில் கசிவு ஏற்படாதவாறு சரி செய்யப்பட்டு குளத்து நீர் மீண்டும் பின்னர் திறக்கப்பட்டது.





கல்வி இராஜாங்க அமைச்சர் எ.அரவிந்த்குமாரினால் கடந்த சனியன்று (30) மூதூர் ஆயிஷா வித்தியாலயத்திற்கான மூன்று மாடி கட்டிடத்திற்குரிய அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது.

(மூதூர் – எஸ்.ஏ.பஹூஸ்)



அண்மையில் நிவ்யோர்க் சென்றிருந்த ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களான ஹர்சன ராஜகருனா,ஹெக்டர் அப்புஹாமி ஆகியிருக்க நிவ்யோர்க் ஐக்கிய மக்கள் சக்தியினர் வரவேற்பளித்தனர், கட்சி முக்கியஸ்தர்களான திருவாளர்கள் இலங்கைத் தூதுவராலய முன்னாள் உத்தியோகஸ்தர் ருஸ்தம், கடுகஸ்தொட்ட ஆர் .எம் இஸ்மாயில் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.




## மங்கையொளி

**பயாஸா இர்ஷாத்**

வல்லாரை உடலுக்கு சக்தியைத் தரவல்லது. வல்லாரையை அளவோடு தான் சாப்பிட வேண்டும். அளவு மீறினால் மயக்கம் வரும். தலைசுற்றல் ஏற்படும். உடம்பை பிழிவதைப் போல வலி ஏற்படும். எனவே கீரையை அடிக்கடி உண்ணாமல் பத்து நாட்களுக்கு ஒருமுறை சாப்பிடுவதே நல்லது.

இதன் பயன்கள்

### வல்லாரையின் பயன்கள்

- ஆயுளை பெருக்கும்.
- பெண்களின் மாதாந்த பிரச்சினைகளை தீர்க்கும்.
- யானைக்கால் நோயை ஆரம்பத்திலேயே வராமல் தடுத்துவிடும்.
- குறிப்பாக இரத்தத்தை சுத்தப்படுத்தும்.
- மூளை பலப்படும்.
- வயிற்றுக்கடுப்பு நீங்கும்.
- வயிற்றுக் கிருமிகளை வெளியேற்றி விடும்.
- வலிப்பு நோயை கட்டுப்படுத்தும்.
- மாலைக்கண் நோயை நிவர்த்தியாக்கும்.
- மாரடைப்பு வருவதை தவிர்க்கும்.
- நரம்பு கோளாறுகளை நீக்கும்.
- மூலச் சூடு அகலும்.
- பலவீனம் நீங்கும்.
- சளியை முறிக்கும்



## கரட் சட்னி



**தேவையான பொருட்கள்**

கரட் - 2
பூண்டு - 3 பல்
எண்ணெய் 1 ஸ்பூன்
காய்ந்த மிளகாய் - 5
கடுகு சிறிதளவு
கறிவேப்பிலை

**செய்முறை :**

கரட்டை சிறியதாக நறுக்கிக் கொள்ளவும். கடாயில் எண்ணெய் ஊற்றி நறுக்கிய கரட், காய்ந்த மிளகாய் பூண்டு சேர்த்து வதக்கவும். பின் ஆறவைத்து விழுதாக அரைத்துக் கொள்ளவும். மீண்டும் கடாயில் எண்ணெய் ஊற்றி கடுகு, கறிவேப்பிலை போட்டு தாளித்து அரைத்த விழுதில் போட்டுக் கிளறவும். இதோ....!! கரட் சட்னி தயார்...!

# பெற்றோருக்காய் ஒரு நிமிடம்..!

தாயின் கருவறையில் பத்திரமாய் பவ்வியமாய் ஒரு சிசு வளர்கிறது நிம்மதியான உறக்கம் கொண்டு தன் செயற்பாட்டை அமைத்துக் கொண்டு செயல்படுகிறது. வெளியுலகை எட்டிப் பார்க்கும் தருணம் வரையில் உண்டு உறங்கி நிம்மதியாக இருக்கிறது வெளியுலகை காணும் தருணம் வீறிட்டு அழுகிறது.

உதிரத்தை பாலாக்கி தன் பசியையும் தூக்கத்தையும் தியாகம் செய்து தன் மூலம் வெளியான ஒரு ஜீவனுக்காக தாய் என்பவள் படும் பாடுகள் கொஞ்சமன்று.

நாளொரு மேனி பொழுதொரு வண்ணமுமாய் பாலூட்டி, சீராட்டி தாய் என்பவள் வீட்டில் இருந்து கவனிக்க தந்தை உழைப்பின் மூலம் குடும்பத்தை கவனிக்கிறார் பாதுகாக்கிறார்.

எந்தப் பிள்ளையும் பெற்றோர் இன்றிய வாழ்வை ஆரோக்கியமாக வாழ்ந்துவிட முடியாது.

எமது பிள்ளைகளை நாம் சிறந்த பிள்ளைகளாக, எதற்கும் துணிந்தவர்களாக, வெற்றியைப் போலவே தோல்வியையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தைரியம் உள்ளவர்களாக வளர்க்க வேண்டும். ஒரு பறவையை எடுத்துக் கொண்டால்



தன் குஞ்சுக்கு பறக்க கற்றுக் கொடுப்பதில்லை. தானாகவே பறக்கிறது. விழுகிறது திரும்பவும் எழுந்து பறக்கிறது அது அந்த குஞ்சு கொண்டுள்ள நம்பிக்கை.

அவ்வாறான நம்பிக்கையை எமது பிள்ளைகளுக்கு கொடுக்கிறோமா..? கோழிக்குஞ்சுகளிடம் எதிரிகள் அண்டாது தாய்க்கோழி காப்பாற்றுமே தவிர அவற்றுக்கான உணவை தேடி கொடுக்காது நாம் எமது பிள்ளைகளின் சிந்தனையை கிளற விடுகிறோமா..?

எந்த மீனும் தன் குட்டிக்கு நீச்சலை கற்றுக்கொடுத்து இந்த இடத்தில் உணவு இருக்கிறது போய் சாப்பிட்டு வா என்று கூறியதில்லை எமது பிள்ளைகளுக்கும் அவ்வாறான தேடலுக்கு எம்மிடம் இடம் இருக்கிறதா..? மனதை ஒருநிலைப்படுத்துங்கள்...!! கண்களை மூடுங்கள்..!!

சற்று சிந்தியுங்கள்..!!

ஆழமாக மூச்சை இழுத்து விடுங்கள்..!!

இப்பொழுது மீண்டும் சிந்தியுங்கள்

எம்மில் பலர் செய்யும் செயல்தான் தன் பிள்ளை மீது அதீத அன்பு கொண்டுள்ளதாக நினைத்துக் கொண்டு அவர்களது சுதந்திரத்தை வீணடித்துக் கொண்டிருப்பர்..

பிள்ளைகள் கீழே விழ வேண்டும்.

விழுந்து செல்ல வேண்டும். அனுபவங்களும் காயங்களும் அவர்களை மேலும் உற்சாகப்படுத்தும். முன்னேறத்தூண்டும். கலங்கித் தெளியும் குட்டை போல ... எமது பிள்ளைகளும் தோல்வியில் வெற்றியடைய பிரார்த்திப்போம்.

உங்கள் பிள்ளைகளை பட்டை தீட்டும் இரத்தினமாக மாற்ற நீங்கள் தயாரா....??!

# ருவன்வெல்லை கூட்டுறவு சங்கத்தில்

## ஐக்கிய மக்கள் சக்தி 9 ஆசனங்களிலும் வெற்றி



ருவன்வெல்லை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பணிப்பாளர் சபைக்காக நடந்த தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி அபேட்சகர்கள் 9 பேரும் வெற்றி பெற்றுள்ளனர்.

பரம்பரைக் கோட்டையாக இருந்த ருவென்வெல்லையில் இம்முறை எல்லா ஆசனங்களையும் ஐ.ம.ச. வெற்றி பெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது என கேகாலை மாவட்ட ஐ.ம.ச அமைப்பாளர் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நிஹால் பாறூக் தெரிவித்தார்.

1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு ருவன்வெல்லையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தீன் கீழ் ஐ.தே.க முழுமையாக வெற்றி பெற்றிருப்பது இதுவே முதற்சந்தர்ப்பம் எனவும் நிஹால் பாறூக் தெரிவித்தார்.

# மாணவர் சஜ்ஜாதுக்கு சிறந்த கல்வி ஆளுமை விருது

**– ஐ. ஏ. காதிர் கான் –**

இலங்கையில் இயங்கி வரும் பிரபல நிறுவனமான கிரியேட்டிவ் பூல் அமைப்பின் மூன்றாவது அகவை நிறைவு விழா, அக விழி சஞ்சிகை வெளியீட்டு விழா மற்றும் விருது வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நிகழ்வுகள், 2023 டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி கொழும்பு பல்கலைக் கழகக் கலை கலாச்சார பீடத்தின் புதிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

அமைப்பின் பணிப்பாளர் அஷ்பாக் ஆதில் தலைமையில் நடைபெற்ற இச்சிறப்பு விருது வழங்கும் நிகழ்வில், 2023 ஆம் ஆண்டின் சிறந்த கல்வி ஆளுமைக்கான விருதை, கொட்டாரமுல்லையைச் சேர்ந்த தென் கிழக்குப் பல்கலைக்கழக இளங்கலை பட்டதாரி மாணவர் மௌலவி முஹம்மத் ஷரீப் முஹம்மத் சஜ்ஜாத் (கபூரி) பெற்றுக்கொண்டார்.

முஹம்மத் ஷரீப் - ஹைருன் பாரிகா ஆகிய தம்பதிகளுக்கு மூத்த புதல்வராகப் பிறந்த இவர், கல்வித்துறையில் மாத்திரமல்லாமல், சர்வதேச அளவில் கலைத்துறையிலும் ஐம்பதுக்கும் மேற்பட்ட விருதுகளையும் பெற்றுள்ளார்.



05ம் பக்கத் தொடர்ச்சி...

எம்பசிக்கு சொல்லி இருந்தேன்... அவர்கள் ரபா எல்லைக்கு வாருங்கள் தருகிறோம் என்று சொன்னார்கள்... ஒரு பஸ்ஸில் எங்களை ஏற்றினார்கள்... 75 பேர் போல அந்த பஸ்ஸில் ஏறினோம்...

எகிப்து எல்லையும் இல்லாம காசா எல்லையும் இல்லாம நடுவில் பஸ் நின்றது.. அப்போ எங்களுக்கு இருந்த இரத்தமெல்லாம் தண்ணி ஆகின மாதிரி இருந்திச்சி... இடைநடுவில் மாட்டிக் கொண்டோம் என நினைத்து பயந்து கொண்டு இருந்தோம்.

பஸ் ட்ரைவர்கிட்ட கேட்டோம் ஏன் பஸ்ஸை நிப்பாட்டி வைத்து இருக்கிறிர்கள் என்று. அதற்கு அவர் எகிப்தில் இருந்து மெசேஜ் வரும் வரைக்கும் நிப்பாட்டி இருக்கோம் என்று சொன்னார்.

அப்புறம் 4 மணித்தியாலத்திற்கு பிறகு எகிப்து போடரை திறந்தாங்க. அப்புறம் சிறிலங்கா எம்பசி ஆட்கள் வந்து எங்களை கூட்டிக் கொண்டு போனாங்க.

வரும் போது மசரியில் 2 நாட்கள் ஹோட்டலில் தங்க வைத்தார்கள். டொக்டர்ஸ் மார் வந்து பிள்ளைகளை சோதனை செய்தார்கள்.

கேள்வி: ஹமாஸ் அமைப்பினர்கள்தான் இந்தப் பிரச்சனைகளுக்கு காரணம்... அவர்கள் தான் தாக்குதலை ஆரம்பித்தார்கள் என்றெல்லாம் பல விமர்சனங்கள் இருக்கின்றன? உங்களுக்கு, அங்குள்ள மக்களுக்கு ஹமாஸ் அமைப்பினரால் பாதுகாப்பு வழங்கப்பட்டதா? பாதுகாப்பிற்காக என்ன ஏற்பாடுகளை செய்தார்கள் ?

பதில்: பாடசாலைகள்தான் பாதுகாப்பான இடம் என்று அங்கேதான் போகச் சொல்வார்கள் .

கேள்வி: ஹமாஸ் அமைப்பினர்களை சாதாரணமாக பார்க்க முடியுமா ? நீங்கள் பார்த்து இருக்கின்றீர்களா ?

பதில்: இல்லை... நான் கண்டதில்லை... அவர்கள் தங்களை வெளிப்படுத்துவதில்லை.

வீடுகளில் இருக்கும் போது வீட்டை பூட்டிக் கொண்டு தான் இருப்போம். வெளியே வரவேண்டாம், யார் வந்து கதவை தட்டினாலும் திறக்க வேண்டாம் என்றுதான் சொல்லுவார்கள். இரவில் கரண்டு இல்லாததால், போன் ߍாழநெ) லைட்டைதான் பாவிப்போம். அப்போதும் வீடுகளில் வெளிச்சம் போட வேண்டாம் என்றுதான் சொல்லுவார்கள். வெளிச்சம் தெரிந்தால் அந்த வீடுகளுக்கு இஸ்ரேல் குண்டு போடுவாங்க.

ஆனால் 20, 30 வருடங்களாக இஸ்ரேல் இராணுவத்தினரால் பிடித்து வைத்திருந்தவர்கள் வீடு திரும்பும் போது மட்டுமே அந்த மக்களும் ஹமாஸ் படையினரும் சந்தோஷத்திற்கு வெடி சுட்டு மகிழ்ச்சி அடைவார்கள். அந்த மக்களின் சந்தோஷம் என்றால் அதுதான்.

கேள்வி: அங்குள்ள குழந்தைகளின் நிலைமைகளை ஊடகங்கள் வாயிலாகவே நாங்கள் காண்கிறோம். ஆனால் நீங்கள் நேரடியாக கண்டிருக்கின்றீர்கள்... அந்த சூழல் எப்படி இருக்கும் ?

பதில்: (கண்களில் கண்ணீர் மல்க பதிலளித்தார் அந்த தாய்) நான் நேரடியாக நிறையவே கண்டிருக்கின்றேன். அந்த குழந்தைகளைப் பார்க்கும் போதெல்லாம் மனது வேதனையால் துடிக்கும். எனக்கும் குழந்தைகள் இருகின்றன. என் குழந்தைகளை நினைத்து எப்போதும் பயமாகவே இருக்கும். கை இல்லாமலும், கால் இல்லாமலும், உடம்பு முழுதும் இரத்தத்தோடு ஹாஸ்பிடலுக்கு தூக்கி கொண்டு ஓடுவார்கள்.

கேள்வி: இஸ்ரேல் இராணுவத்தினர் சிறுவர்களையெல்லாம் கைது செய்து கொண்டு போய் விடுகிறார்கள். பல ஆண்டுகளாக அவர்களை சிறைக் கைதிகளாக வைத்திருக்கிறார்கள். அந்த மாதிரியான நிலையில் பெற்றோர்களின் நிலை எப்படி இருக்கும் ?

பதில்: மிகவும் வேதனையில் துடித்து அழுவார்கள். மிகவும் பயங்கரமான விஷயமும் அதுதான். பிள்ளைகளை பாதுகாத்துக் கொள்வதுதான் பெரிய வேலையாக இருக்கும். வெளியில் விட்டு விடவே பயமாக இருக்கும். 20, 30 வருடத்திற்கு பிறகு சிறையில் இருந்து வரும் பிள்ளைகளைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டுக் கொள்வார்கள். அந்தப் பிள்ளைகள் உடம்பு மெலிந்து, நோயாளிகளாகவும் வருவார்கள்.

கேள்வி: உங்களுக்கு இங்கே உறவுகள் யார் இருக்கின்றார்கள் ?

பதில்: எனக்கு இங்கே உம்மா, வாப்பா இல்லை. அவங்க மௌத்தாகி விட்டாங்க. சகோதர, சகோதரிகள் தான் இருக்கிறாங்க. அவர்களுடன் தான் தற்போது தங்கி இருக்கின்றேன்.

கேள்வி: பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை எவ்வாறு தொடர உள்ளீர்கள் ?

பதில்: பிள்ளைகளை இங்கே பாடசாலைகளில் சேர்க்க வேண்டும். அவர்களுக்கு அரபு மொழி மட்டுமே தெரியும். வேறு மொழி தெரியாது. அதுதான் பெரிய யோசனையாக உள்ளது.

கேள்வி: உங்களுடைய கணவருடன் தொடர்பில் உள்ளீர்களா ?

பதில்: ஆமாம் பேசுகிறேன். சில நாட்களில் தொடர்பு கிடைக்க முடியாமலும் போய் விடும்.

கேள்வி: அவர் இப்போது எங்கே இருக்கிறார் ?

பதில்: ரபாவில் இருக்கிறார்.

கேள்வி: அவர் ஏன் உங்களோடு வரவில்லை.

பதில்: அவரது குடும்பத்தை பார்த்துக் கொள்ள வேண்டிய தேவை இருப்பதாலும், வயதான தாய் இருக்கிறார் அவரையும் கவனித்துக் கொள்ள இருப்பதால் அவர் எங்களுடன் வரவில்லை. நீங்கள் பிள்ளைகளுடன் இலங்கை போங்க.. நான் யுத்தம் முடிந்ததும் வருகிறேன் என்று சொல்லி எங்களை அனுப்பி வைத்தார். இன்ஷா அல்லாஹ் அவர் வருவார் என்ற நம்பிக்கையில் காத்துக் கொண்டு இருக்கின்றோம் .

நடக்கும் யுத்தத்தில் எனது கணவரின் குடும்பத்தில் 50 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

கேள்வி: ஜனாஸாக்கள் குவிந்து காணப்படுவதை வீடியோ மூலம் காண்கிறோம். அவைகளை அடக்குவதற்கான ஏற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றது.

பதில்: அங்கே ஒரு குரூப் இருக்கிறார்கள். அவர்கள் தான் சாப்பாடு கொடுப்பதும், ஜனாஸாக்களை அடக்கம் பண்ணுவதும்.

முற்றும். மனிதாபிமானமற்ற முறையில், போர் சட்ட விதிகளை மீறி இஸ்ரேல் நடாத்திக் கொண்டிருக்கும் இந்த போரில் பலஸ்தீன மக்கள் வெற்றி பெற்று நிம்மதியாகவும் , சந்தோஷமாகவும் வாழ எல்லோரும் பிரார்த்திப்போமாக.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.